உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—௨௫] பிரபவ-௵ புரட்டாசி௴ [பகுதி—௧௧.

Vol. XXV. *September-October-1927.* No. 11.

கூத்தரும் கல்வெட்டும்.

ஆநந்தக்கூத்தர், பகழிக்கூத்தர், சேந்தன்கூத்தர் முதலான கூத்தர் பலரினின்றும் பிரித்துக்காட்டுமாறு கௌடப்புலவராம் கூத்தமுதலியாரை ஒட்டக்கூத்தர் என்று கூறுவர். இவர் நெய்தற்றொழிலையுடைய செங்குந்தரென்னும் கைக்கோளவகுப்பினரென்றும், கலைமகள் தம்பலங் கொடுக்க இவர்க்குக் கவிபாடுந்திறமை உண்டாயிற்றென்றும் பெரியோர் கூறுவர்.

கி. பி. 1118 முதல் 1135 வரை ஆண்ட விக்ரமசோழன்காலத்திலும், 1135 முதல் 1146 வரை ஆண்ட இரண்டாங்குலோத்துங்கன் காலத்திலும், 1146 முதல் 1162 வரை ஆண்ட இராஜராஜன்காலத்திலும் ஸமஸ்தானப்புலவராயிருந்து அம்மூவரையும் உலாக்களாலும் கோவையாலும் புகழ்ந்துபாடியவர் இவரேயாவர்.

'கோவையுலாவந்தாதிக்கொட்டக்கூத்தன்' எனப் பிற்காலத்தார் புகழும் பெருமைபெற்ற இப்புலவர்பெருமகனது ஊர் காழி என்று சிலரும் மலரி என்று ஒரு சிலரும் கூறுவர். காழியென்பார் 'காழியொட்டக்கூத்த' னென்ற அடியை மேற்கோளாகக் காட்டுவர். தண்டியலங்காரத்திற் காணப்படும்,

"சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்பம் நிறைப்பவற்றுள்—ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு"

என்னுஞ் செய்யுளை எடுத்துக்காட்டிக் கூத்தனூர் மலரி யென்று முதன் முதல் வெளியிட்டவர் ஸேதுஸமஸ்தான மஹாவித்வான் ஸ்ரீமத் ரா. இராகவையங்கார் சுவாமிகளாவர். கூத்தனூர் மலரி என்று நிறுவும் பிற சான்று ஒன்றும் இதுவரை கண்டோமில்லை. இம்மலரி சேதுநாட்டி லுள்ளதோர் ஊரென்று ஐயங்காரவர்களே சேதுநாடுந் தமிழும் என்னுஞ் சிறுநூலிலே வரைந்துள்ளார்கள்.

இப்புலவர்பெருமகன் பிறந்தது பாண்டிமண்டலத்தாயின், இவர் அம்மண்டலமன்னனைச் சார்ந்துவதியாது யாதுகாரணத்தாற் சோழனை யடைந்து வாழ்ந்தனர்? என்ற வினாவுக்கு விடையிறுக்குங்கால் முட் டுப்பாடேற்படும். பழுமரம் எங்குண்டோ அங்குச் சென்று வதியும் பறவைகள்போலப் புலவர்களும் பயன்றருவார்த் தேடிச்சென்று வதிதல் இயல்பெனின், முச்சங்கங்களை வளர்த்தநாட்டினனான பாண்டியன் கல்வி யிற்பெரியாராய கூத்தரைப்புரவாது பிறநாடுசெல்ல விடுத்தனன் என்பது பொருந்தாது. ஆகவின் இவர் சோழநாட்டினரென்பதே பொருத்த முடையதென்று தோன்றுகிறது. ஆயின், மலரி எனப் பெயரியதோரூர் சோழநாட்டிற் காணப்படவில்லையேயெனின் அற்றன்று; இப்பெயரியதோ ரூர் சோணாட்டுப் பண்டுதொட்டுண்டென்பது, இதுபொழுது திருவரம் பூர் என்று கூறப்படும் திருஎறும்பியூர்க்கோயிற்கல்வெட்டில், "பாண்டிய குலாசனிவளநாட்டு மீகோழைநாட்டிலே ஸ்ரீகண்டசதுர்வேதிமங்கல மான மலரி" (1914-ம் ஆண்டுக் கல்வெட்டறிக்கை No. 136.) என்று காணப்படுவதால் விளங்கும்.

அன்றியும், இவர், கலைமகள் தம்பலங்கொடுக்கப் பெற்றுக் கவி பாடுந்திறமுற்றசெய்தி முன்னரே குறிக்கப்பட்டது. அங்ஙனம் இவர் கலைமகளை வழிபட்டு அருள்பெற்றுக் கவிதாசார்வபௌமனான தலம் கூத்தனூர் என்பர். இக்கூத்தனூர், தஞ்சைஜில்லாவில் நன்னிலம் தாலூகாவிலே பூந்தோட்டம் என்ற புகைரதத்தங்கலுக்கு மேற்கில் ஒரு

மைல்தூரத்தில் அரசலாற்றின் தென்கரையில் இருக்கிறது. மாயூரத்திலிருந்து திருவாரூர்க்குச் செல்லும் சாலையில் அரசலாற்றின்பாலத்துக்குமேற்கில் பாலத்தையடுத்திருப்பது இவ்வூர்தான். இங்கு வாணி கோயிலொன்றுண்டு; அதற்குத் திருவிழாவும் உண்டு. இதுவும் இவர் சோழநாட்டினர் என்பதற்கு ஆதாரமாகலாம்.

சின்னாண்முன்னர் யான் இக்கூத்தனூர்க்குச்சென்றிருந்தபோது வாணிகோயிலில் ஏதாவது கல்வெட்டிருக்குமோவெனத் துருவிப்பார்க்குங்கால், கோயிலினுள்ளேயிருந்த கிணற்றினருகே, முன்னொருகால், சரசுவதியம்மன்சிலை பதிக்கப்பட்டிருந்த ஆதாரபீடம், தலைகீழாய் ஆடை துவைக்குங்கல்லாயமைந்துகிடந்ததிற் சில எழுத்துக்களிருக்கக் கண்டு அதனைப் புரட்டிப் பார்க்கையில், பின்வரும் வாசகங்கள் அதனிற் காணப்பட்டன. அவை,

(1) "[ஸ்வஸ்தி] ஸ்ரீஸாஸ்வதீதெவியை எழுந்

(2) [தருளிவி] த்தார் இவ்வூர் (நஞ்சை) உய........

(3) ம் காணியுடைய மலரி உடையார்

(4) இந்தக் கவிச்சக்கரவத்திகள் பேர

(5) னார் *கவிப்பேர்மாளான உவாதகூத்தர்"

என்பனவாம். [இத்தகைய கல்வெட்டொன்றுண்டென்று இதற்குமுன் அவ்வூராரும் அறியார். இவ்வளவு பெருமைவாய்ந்த கல்வெட்டமைந்த இச்சிலை அழுக்காடை கசக்கும் கல்லாக அமைந்ததற்கிரங்கி, அதனைப் பாதுகாக்குமாறு அவ்வூரவர்க்குக்கூறி, இக்கல்வெட்டைப்பற்றிக் கல்வெட்டிலாகாக்காருக்கும் அறிவித்தேன்.]

*கவிப்பேர்மாளான என்பது கவிப்பெருமாளான' என்றிருக்கலாம்.

இக்கல்வெட்டினின்றும் அறியக்கிடப்பது வாணிதாசன் மலரி உடையார் என்பது. வாணியினுடைய அருளாலேயே கூத்தர் கவிவல்லா ரானமையால் இவருக்குச் சோழன் இவ்வூரை முற்றூட்டாக அளித் திருக்கலாம். அதனால் பிற இடங்களிற் காண்பதுபோல இதுவும் பழம் பெயர் நீங்கிக் கூத்தனூர் என்ற பெயரை அடைந்திருக்கலாம். பாட் டன்பெயரைப் பேரனுக்கு இடுவது நம்நாட்டுவழக்கமாகையாலும் இக் கௌடப்புலவாது பேரனர்பெயர் வரதக்கூத்தர் என்று காணப்படுவ தாலும் நமது புலவர்பெருமானுக்கு வரதக்கூத்தரென்று ஆதியிற் பெய ரிடப்பட்டிருக்கலாம் என்று ஊகிக்கலாம். அன்றி, பின்னுள்ளார் வாணி யருளாற் கிடைத்த செல்வங் கருதிக் கூத்தர் என்ற பெயர்முன் வரத என்னும் அடைமொழியை ஒட்டி வழங்கியிருக்கவும் கூடும்.

இவ்வாணிகோயிலானது ஒட்டக்கூத்தரால் எடுக்கப்பட்டதென்ற நாட்டுவழக்குக்கு இடமின்றி, அவரதுபேரனால் எடுக்கப்பட்டதென்ற உண்மைச்செய்தி இக்கல்வெட்டால் உறுதிப்படுகிறது. இக்கல்வெட்டி லுள்ள எழுத்துக்களை உற்றுநோக்குங்கால் அவை பழைய எழுத்துக் களைப்போற் காணப்படாமல் இக்காலத்து எழுத்துக்களைப்போற் காணப் படுகின்றன. ஆகவே, ஒட்டக்கூத்தரதுபேரனான வரதக்கூத்தர் மூன் றுங்குலோத்துங்கன்காலத்திலோ அதற்குப்பின்னோ இவ்வாலயத்தைக் கட்டியிருக்கவேண்டுமெனத் தோற்றுகிறது.

இதுகாறும் கூறியவற்றால், கூத்தர் மலரி யென்னும் ஊருடையார் என்பதும், அம்மலரி சோழநாட்டுள்ளதென்பதும், கூத்தர் சோழனால் கூத்தனூரை முற்றூட்டாகப்பெற்றிருக்கவேண்டுமென்பதும், கூத்தர் வாணியருள்பெற்றசரிதை உண்மையுடையதென்பதும் புலனாகலாம்.

மலரி கூத்தனூர் என்று முதன்முதல் எடுத்துக்காட்டிய சேது ஸமஸ்தான மஹாவித்வான் ரா. இராகவையங்காரவர்களுக்குத் தமி முலகம் என்றும் கடப்பாடுடையது.

இலக்கணவிளக்க ஆசிரியர் பரம்பரை

திரு. சோமசுந்தரதேசிகன்.

ஸ்ரீ:

கம்பரைக் கற்கும் முறை.

[பி. ஸ்ரீ. ஆசாரியர் எழுதுவது.]

(௩௩௧-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மூன்றிற்சோலை.

[பாலகாண்ட அமைப்பு.]

சிங்காரப்பூங்காவனம்.

திருமணமென்னும் இரண்டாவது முக்கியநிகழ்ச்சிக்குப் பத்தாவதுபடலம் முதல் இருபதாவதுபடலம் ஈறாகவுள்ள பகுதி எவ்வாறு பொருத்தமாக அமைந்துள்ளது என்பது இங்கு ஒருவாறு ஆராயப்படும். ‘அறத்தின்மூர்த்தி’யாகிய இராமனது அறப்பெருங்கோயில் அயோத்தியெனின், “அறந்திறம்புமென் றையன் அயோத்தியிற்—பிறந்தபின்பும் பிரிவிலளாயினள்” என்று பாராட்டும் பெருமைவாய்ந்த அவனது வாழ்க்கைத்துணையாகிய சீதாபிராட்டியின் திருக்கோயிலாகத் திகழ்வது மிதிலைமாநகரம். இந்நகரம் மிதிலைக்காட்சிப்படலத்தில் வருணிக்கப்படுகின்றது. அயோத்திமாநகரம் அறிவுத்தெய்வத்திற்குரிய வெண்டாமரைமலர்போலத்தோன்றுகின்றதெனின், மிதிலைமாநகரம் “சீதையைத் தருதலாலே திருமகள் இருந்த செய்ய—போதெனப் பொலிந்துதோன்று”கின்றது. கோசலநாடு அறப்பெருங்கோயிலாக நிர்மாணஞ்செய்யப்பெறுகிறதெனின், மிதிலை, இராமனும் சீதையும் ஒருவரையொருவர் சந்தித்துக் காதலிப்பதற்கேற்றதோர் சிங்காரப்பூங்காவனமாகச் சிருஷ்டிக்கப்படுகின்றது.

“மையறு மலரினீங்கி யான்செய்மா தவத்தின் வந்து
செய்யவ ளிருந்தா ளென்று செழுமணிக் கொடிக ளென்னுங்
கைகளை நீட்டி யந்தக் கடிநகர் கமலச் செங்கண்
ஐயனை யொல்லை வாவென் றழைப்பது போன்ற தம்மா”

என்று மிதிலைக்காட்சி தொடங்குகின்றது. மணிக்கொடிகளெல்லாம் இராமனை வாவென்றழைப்பதுபோலவும் நடைபெறப்போகும் காதல்

மணத்தைக்குறித்து மகிழ்வெய்தி விசும்பினூடும் அரம்பையரென ஆடுவ போலவும் காணப்படுகின்றன. இத்தகைய காட்சிகளும் பிறவும் மிதிலை மாநகரினை ஒரு காதற்சோலையாகக் காட்டுகின்றன. இராமனுதியோர் மிதிலையின் அலங்காரமான பெரியவீதிகளில்,

"நெய்திர ணரம்பிற் றந்த மழலையி னியன்ற பாடல்
தைவரு மகர வீணை தண்ணுமை தழுவித் தூங்கக்
கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ் செல்ல
ஐயநுண் ணிடையா ராடு மாடக அரங்கு கண்டார்."

"பூசலி னெழுந்த வண்டு மருங்கினுக் கிரங்கிப் பொங்க
மாசுறு பிறவி போல வருவது போவ தாகிக்
காசறு பவளச் செங்காய் மரகதக் கமுகு பூண்ட
ஊசலின் மகளிர் மைந்தர் சிந்தையோ டுலவக் கண்டார்."

இவ்வாறு பல விநோதங்களைக் கண்டு அதிசயித்து நடந்துசென்ற அவர், அரசனது அரண்மனையின் மதிற்புறத்துற்றனர்.

"பொன்னின் சோதி போதினி னாற்றம் பொலிவேபோல்
தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்
கன்னிம் மாடத் தும்பரின் மாடே களிபேடோ
டன்னம் மாடும் முன்றுறை கண்டங் கயலின்றாள்."

பாங்கிமார் சூழச் 'சதகோடியின் சேவிப்ப மின்னரசென்னும்படி' கன்னிமாடத்துநின்ற சீதையின்கண்களும் இராமன்கண்களும் சந்தித்தன. 'கல்லும் புல்லும் கண்டு உருக' நின்ற பெண்கனி, தன் 'ஆசை யின்கனி'யினைச் சந்திக்கின்றாள். 'அண்ணலும் நோக்கினன் அவளும் நோக்கினள்' என்ற வாக்கு, காதல்மணக்கமழும் கம்பசித்திரத்தை வெளியிடுவதோடு, இராமராஜ்யத்திற் பெண்மக்களுக்குரியதாகவிருந்த விரசுதந்திரத்தினையும் வெளியிடுகின்றது. இத்தகைய காட்சிக்கிசைய வே மிதிலைக்காட்சிப்படலம் சித்திரிக்கப்பெறுகின்றது. இராமன்முதலி யோர் சீதைகண்ணுக்குப் புலப்படாது மறைந்துபோனபின், சூரியன் அஸ்தமிப்பதும் செக்கர்வானம் மாலைப்பொழுது இருட்காலம் சந்திரோதயம் முதலியவற்றாற் காதல்நோய் கைம்மிகப்பெற்று அவ்விருவரும் வருந்துவதும் வருணிக்கப்படுகின்றன. மிதிலைக்காட்சிப்படலத்திற் சித்திரிக்கப்பெறும் காதலர்காட்சி, கடிமணப்படலத்திற் குறிக்கப்படும் கரணத்திற்கு இன்றியமையாத பூர்வாங்கமாகின்றது.

"விருந்தினர்கள் நின்னுடைய வேள்விகாணியவந்தார் வில்லுங் காண்பார்" என்று மிதிலைக்காட்சிப் படலம் முற்றுப்பெறுவது கார்முகப் படலத்தில் இராமன் வில்லிறுத்து வெற்றிபெறுவதற்கு ஏற்ற தோற்றுவாயாக அமைகின்றது. இவ்விரண்டுபடலங்களுக்குமிடையேயுள்ள குலமுறைகிளத்துபடலம், இராமனது வரலாறும் புயவலியும் இவையென்று கம்பீரமாகக் கட்டியங்கூறுவதுபோல் எடுத்துக்காட்டுகின்றது.

இனிக் கார்முகப்படலத்தை ஆராய்வோம். இராமன்வந்து வில்லிறுத்துச் சனகிபைமணந்தானென்பது வான்மீகராமாயணம். இராமன் வந்து சீதையைக்கண்டு வில்லிறுத்தானென்பது கம்பர்கதை. பண்டைத் தமிழரின் வழக்க ஒழுக்கங்கட்கிசைய நம் கவிஞர்பெருமான் கதைப் போக்கினையும் காவியப்போக்கினையும் மாற்றியமைத்துள்ளார் என்பதற்கு இம்மாறுதலும் ஒரு சான்றாகும்.

இப்படலத்தின் முதற்கண் வில்லின்வரலாற்றினையும் சீதையின் வரலாற்றினையும் சதாநந்தமுனிவரன் சொல்லத்தொடங்கி,

> "அன்றுமுத லின்றுவரை யாருமிந்தச் சிலையருகு
> சென்றுமிலர் போயொளித்தார் தேர்வேந்தர் திரிந்துமிலர்
> என்றுமினி மணமுமிலை யென்றிருந்தேம் இவனேற்றின்
> நன்றுமலர்க் குழற்சீதை நலம்பழுதா காதென்றான்."

இம்முனிவன்சொன்னதையுன்னி அறிவனாகிய விசுவாமித்திரன் இராமனைப்பார்த்தான்; இராமன் வில்லைப்பார்த் தெழுந்தான். இராமனையும் வில்லையும் பார்த்து மாதர்கள் பலவாறு பேச, வீரன், 'பொழிந்த நெய்யாகுதிவாய்வழிபொங்கி யெழுந்தகொழுங்கனலென்ன' எழுந்து சென்று,

> "ஆடக மால்வரை யன்னது தன்னைத்
> தேடரு மாமணி சீதையெ னும்பொற்
> சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
> ஏடவிழ் மாலையி தென்ன எடுத்தான்."

சீதையின்காதலே இராமன் அநாயாசமாக வில்லிறுத்து வெற்றி பெற்றதற்குக் காரணமாகுமென்பது இங்குக் கம்பர்குறிப்பு. இது, கோலங்காண்படலத்திலுள்ள,

"அச்சென நினைத்தழுத வந்தண னிருந்தான்
பச்சைமலை யொத்தபடி வத்தட லிராமன்
நச்சுடை வடிக்கண்மலர் நங்கையிவ ளென்றால்
இச்சிலை கிடக்கமலை யேழையு மிறுன்றே"

என்ற செய்யுளாலும் அரண்செய்யப்பெறுகின்றது. இராமன் வில் லிறுத்து வெற்றிசூடியதற்குச் சீதையின்காதலே முக்கியகாரணமா வதுபோலவே, அவன் பரசுராமனைவென்று வலியழித்ததற்கும் அது ஒரு காரணமாகலாம் என்று ஊகித்தல் தவறாகாது. இராமாயணம் முழுதுமே (இராமனது வீரத்தோளின் வெற்றியாகமட்டும் அமையாது) காதலின்வெற்றியாகவும் அமையுமென்பது கம்பசித்திரம். எனவே, சீதாராமரின் காதலைவருணிப்பது கம்பரது கவிச்சித்திரத்திற்கு இன்றி யமையாததாகும்.

"கண்ணொடு கண்ணிணை கவ்வி யொன்றையொன்
றுண்ணவு நிலைபெறா துணர்வு மொன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"

என்று மிதிலைக்காட்சிப்படலங்கூறுவதைக்கோலங்காண்படலத்திலுள்ள,

"கருங்கடை நெடுங்கணொளி யாறுநிறை கண்ணப்
பெருங்கடலின் மண்டவுயிர் பெற்றினி துயிர்க்கும்
அருங்கல னணங்கரசி யாரமிழ் தனைத்தும்
ஒருங்குட னருந்தினரை யொத்துடல் தடித்தாள்"

என்ற செய்யுள் மீண்டும் வலியுறுத்துவதாகும். வில்லிறுத்தசெய்தி யறிந்த ஒரு பாங்கி சென்று, அதனைச் சீதைக்கு உரைக்க, அதுகேட்ட சீதைகூற்றாக,

"சொல்லிய குறியினத் தோன்றலே யவன்
அல்லனேல் இறப்பன்"

என்ற கார்முகப்படலக் கவிப்பகுதியும்,

"வெள்ளத்தின் சடிலத் தான்றன் வெஞ்சிலை யிறுத்த வீரன்
தள்ளத்தன் னாவி சோரத் தனிப்பெரும் பெண்மை தன்னை
அள்ளிக்கொண் டகன்ற காளை யல்லன்கொ லாக்கொ லென்பாள்
உள்ளத்தின் ஊச லாடுங் குழைகிழ துமிழ விட்டார்"

என்ற கோலங்காண்படல வருணனைக்கவியும் கம்பர் வான்மீகத்தினின்று மாறுபட்டுச் சித்திரிக்கும் காதற்றிருமணத்துக்கு வாசகாது கவனத்தை ஈர்க்கின்றன.

இங்ஙனம், மிதிலைக்காட்சிப்படலம் குலமுறைகிளத்துபடலம் கார்முகப்படலம் கோலங்காண்படலம் ஆகிய முக்கியமானபகுதிகள் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த பொற்சரடுபோல் அமைந்து கடிமணப் படலத்தைத் தழுவிநிற்கின்றன.

இனி, எழுச்சிப்படலம் முதல் உலாவியற்படலம் ஈறுகவுள்ளபகுதி இத்தகைய கம்பசித்திரத்தில் எவ்வாறு இடம்பெறுகின்றதென்பதையும் கவனிப்போம்.

இராமன் வில்லிறுத்தபின் ஜனகன், கௌசிகனைநோக்கி,

"உரைசெயெம் பெருமவுன் புதல்வன் வேள்விதான்
விரைவினின் றெருபகன் முடித்தல் வேட்கையோ
முரைசெறிந் ததிர்கழன் முழங்கு தானையவ்
வரைசையு மிவ்வழி யழைத்தல் வேட்கையோ?"

என்று ஆத்திரத்தோடு வினவுகின்றான். கௌசிகன், தசாதனை வருவித்து மணஞ்செய்வதே நன்றென, ஜனகன், எல்லையில் உவகையோடு 'இங்குநடந்தவைகளைச் சொல்லுங்'சௌன்று சக்கரவர்த்திக்குத் தூதும் திருமுகமும் அனுப்புகின்றான். இந்நிகழ்ச்சி கார்முகப்படலத்தின் இறுவாயாக அமைந்து அடுத்துவரும் எழுச்சிப்படலம் முதல் எதிர்கோட்படலம் ஈறுகஉள்ள ஆறுபடலங்களுக்கும் தோற்றுவாயாகின்றது.

தூதுவர்மூலம் இராமன் வில்லிறுத்ததும், திருமணநிகழ்வும் தெரிந்த சக்கரவர்த்தி, தேவியரும் மந்திரச்சுற்றமும் சேனைசமூகமும் நகரமாந்தரும் தற்சூழ்ந்துவா மிதிலைக்குச்செல்ல வழிக்கொண்டமை எழுச்சிப்படலத்தாலும், செல்லும் நெறியிடை அவன் தங்கிச்சென்ற இடங்களில் நிகழ்ந்த வரைக்காட்சியும் பொழில்விளையாட்டும் புனல்விளையாட்டும் மதுபானவிளையாட்டும் முறையே வரைக்காட்சிப்படலம், பூக்கொய்படலம், புனல்விளையாட்டுப்படலம், உண்டாட்டுப்படலம் என்பனவற்றாலும், இவ்வாறு வந்த சக்கரவர்த்தியை ஜனகன் எதிர்கொண்டழைத்தமையும் சக்கரவர்த்தி தன்னை எதிர்கொண்டுவணங்கிய இரா

மனைத் தழுவி மகிழ்ந்தமையும் எதிர்கோட்படலத்தாலும் கூறப்பட்டுள்ளன. பின்னர், மணமகனாகிய இராமன், மிதிலையின் இராஜவீதிமுதலியவற்றிற்பிரவேசித்துப் பேதைமுதற் பேரிளம்பெண் ஈறாகவுள்ள எழுவகைப்பருவமாதரும் நெருங்கித் தேனுண்ணும்வண்டுகள்போற் றற்சூழ்ந்து மகிழுமாறு உலாவந்ததன்மை உலாவியற்படலத்திற் சித்திரிக்கப்படுகின்றது. இப்படலம் பின்வரும் கோலங்காண்படலம், கடிமணப்படலம் என்பவற்றுக்கு இன்றியமையாத பிரவேசமாகின்றது.

இவ்வாறு மிதிலைக்காட்சிப்படலம் முதல், கடிமணப்படலம் ஈறாகவுள்ள படலங்கள் ஒன்றோடொன்று பொருந்தியமைந்து சீதாராமரின் திருமணத்திற்கேற்றதோர் சிங்காரப்பூங்காவனமாக அமைகின்றன.

பாலகாண்டத்தின் முதல்நான்குபடலங்களும் திருவவதாரப்படலத்தை அரண்செய்கின்றன. அவ்வண்ணமே பத்தாவது மிதிலைக்காட்சி தொடக்கமான பதினொருபடலங்களும் கடிமணப்படலத்துக் கணியென்ன அமைக்கப்பட்டுள்ளன. பாலகாண்டத்தின் பெரும்பகுதியான இப்பதினைந்து படலங்களும் அக்காண்டத்தின் இருபெருநிகழ்ச்சிகளான திருவவதாரம் திருமணம் என்பவற்றைத் தழுவியமைகின்றன வென்பதை ஆராய்ந்தோம்.

இனி இக்காண்டத்தின் இறுதியிலுள்ளதாகிய பரசுராமப்படலம் இம்மூன்றிற்சோலையி னகத்து எவ்வாறு பொருந்தியமைகின்றதென்பதையும் கவனிப்போம்.

பரசுராம கருவபங்கம்.

பரசுராமகருவபங்கம் வில்லிறுத்ததுபோலவே காதலின்வெற்றியாகக் கருதப்படல்கூடுமென்பது முன் குறிக்கப்பட்டது.

*"மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில்
இற்ற வன்றினும் எறிமழு வாளவ னிழுக்க
முற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானான்"

என்ற செய்யுளில் இராமன் வில்லிறுத்தடைந்த வெற்றியும், பரசுராமனை வலியழித்தடைந்த வெற்றியும் ஒன்றினொன் றுச்சமான வீரச்செயல்களாக ஒரேகோவையிற் கோக்கப்படுகின்றன. இச்செய்யுளிற் றசாதனுக்

* அயோத்தியாகாண்டம், மந்திரப்படலம்,—செய்—௪௨.

குப் பேருவகையளித்த நாற்பெருநிகழ்ச்சிகள் குறிக்கப்பெறுகின்றன. அவை, முறையே இராமன்பிறப்பு, வில்லிறுத்தவெற்றி, பரசுராமனிழுக்கம், 'இனியிம் மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை' என்று வசிட்டன் இராமனுக்கு முடிசூட்டுதற்குரிய யோக்கியதாபத்திரமளித்தல் என்பனவாம். இந் நான்குநிகழ்ச்சிகளையும் இராமனது வாழ்க்கையின் முதற்பகுதிக்குரிய நான்கு மைற்கற்கள் என்று கூறுதல் பொருந்தும். இவை சக்கரவர்த்திக்கு ஒன்றினொன்று அதிகமாக உவகைதருகின்றன. இராமனது அவதாரத்துக்குப்பின் சக்கரவர்த்திக்குப் பேருவகையளித்த இரண்டுவீரச்செயல்கள் இராமன் வில்லிறுத்து வெற்றிபெற்றதும், பாசுராமன் வலியையழித்ததுமேயாகும். இவ்விருபெருஞ்செயல்களும் திருமணத்துக்கு முன்னும் பின்னும் அமைந்து, சீதையெனும் திருவை அணியெனக்கொண்ட வீரத்தோள்களின்பெருமையினை உள்ளவாறு வெளியிடுகின்றன.

"வில்லென்னு நெடுவரையால் வேந்தென்னுங் கடல்கலக்கி
எல்லென்னு மணிமுறுவ லிந்துமதி பெனுந்திருவை
அல்லென்னுந் திருநிறத்த அரியென்ன அயனென்பான்
மல்லென்னுந் திரள்புயத்துக் கணியென்ன வைத்தானே"

என்று குலமுறைகிளத்துபடலம் கூறுவது 'வீரமே அழகினுக்கு உரிமை வாய்ந்ததாகும்' (None but the brave deserve the fair) என்னுங் கொள்கையினை வெளியிடுகின்றது. இக்கொள்கை, இராமன் தாய்மார் 'நன்மகனுக்கிவள் நல்லணி' என்று சீதையைநோக்கிக் கூறி மகிழ்வதாகக் கடிமணப்படலம் கூறுவதாலும் வலியுறும். எனினும், சீதாராமரது வீரத்திருமணத்தை வான்மீகரைப்போலக் கேவலம் ஓர் அசுரமணமாக்காமற் காதற்றிருமணமாக்கிய சாதுரியமும் ரஸிகத்தன்மையும் கம்பருக்கே யுரியனவாகும். கவியின்கூற்றாகவும் விசுவாமித்திரன்வாக்காகவும் முறையே கார்முகப்படலத்திலும் கோலங்காண்படலத்திலும் வெளியிடப்பெற்றிருக்கும் குறிப்புக்கள், வில்லிறுத்த இராமனது வீரத்தை விசிறி ஜ்வாலைசெய்தது காதலேயாகுமெனச் சுட்டிக்காட்டுகின்றன. வில்லிறுத்தபோது இராமன்காட்டிய வீரத்தின் உயிர்நிலையாக அமைந்தது காதலேயாகுமென்பது கம்பசித்திரத்தில் வெளிப்படையாகவிளங்குகின்றது. பாசுராமகர்வபங்கத்திலும் இராமனது வீரத்துக்குக்கா

ணம் காதலாக இருத்தல்கூடும். இது, கம்பசித்திரத்தில் இலைமறை காய்போற் குறிக்கப்பெற்றுளதென்று கொள்வது இழுக்காகாது. ஏனெனில், 'கமலக்கண்ணனுள்ளுறையுயி'ராகிய சீதையின்காதல் இராமனது வீரத்துக்கும் உள்ளுறையுயிராகவே அமைந்துளதென்பது கம்பர் கொள்கை. இக்கொள்கையாலன்றே, "நீடிய அரக்கர்சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலைபிராமன் றோள்வலி" யாகிய பழைய இராமாயணம், காதலின்வெற்றியாகிய புதியசிருஷ்டியாகின்றது.

"நீத்த மதனின் முளைத்தெழுந்த நெடுவெண் டிங்க ளெனுந்தச்சன்
மீத்தண் கரங்க ளவைபரப்பி மிகுவெண் ணிலவாம் வெண்சுதையாற்
காத்த கண்ணன் மணியுந்திக் கமல நாளத் திடைப்பண்டு
பூத்த வண்டம் பழையதென்று புதுக்கு வானும் போன்றுளதால்"

என்று வெண்ணிலவின் தண்ணொளியில் மூழ்கிக்கிடந்த உலகினைக் கம்பர் வருணிக்கின்றார். பழைய அண்டத்தைப் புதுப்பித்த தண்ணமுத வெண்மதியம், கவியமுதம்பொழியும் கம்பரது மேதாவிலாசத்துக் குபலக்ஷணமாகக் கொள்ளத்தக்கது. வான்மீகியின் கவியுள்ளத்தே பூத்த இராமாயணம் பழையதென்று காவியவுலகின் புதியபடைப்பாகவும் ரஸிகர்களுக்குப் புதுவிருந்தாகவும் கம்பர் தம்இராமாயணத்தை இயற்றியுள்ளார் என்று கருதுவது புதிய ஆராய்ச்சிமுறையால் ஏற்படும் முடிபொடு பொருந்துவதாகும். கம்பர் செய்துள்ள முக்கியமான புதுமைகளி லொன்று 'காசில்கொற்றத் திராமன்கதை'யினைக் காதலின்வெற்றியாகச் சமைத்ததாகும். வில்லிறுத்ததுமுதல் இராவணவதம் ஈறாகவுள்ள நிகழ்ச்சிகளெல்லாம் காதல் என்னும் பொன்னூணிற் கோக்கப்பட்டுள்ள மணிகளெனத் திகழ்கின்றன. இவ்வாறு இராவணவதமென்னும் தனிப்பெருநிகழ்ச்சியினை நாயகமணியாகக்கொண்டு சுடரும் 'காதல் – மாலை'யில், பரசுராமகர்வபங்கம் எனபது வில்லிறுத்தவெற்றியென்னும் மணியினையடுத்து அபூர்வசோபையோடுதிகழும் ஓரரியமணியாகுமென்பது எமது அபிப்பிராயம்.

இனி, ஆறுவது கையடைப்படலம் முதல் ஒன்பதாவது அகலிகைப்படலம் ஈறாகவுள்ள நான்குபடலங்களும் பாலகாண்டமென்னும் முன்றிற்சோலையினகத்தே எவ்வாறு பொருந்தியமைகின்றன என்பதை ஆராய்வோம்.

விசுவாமித்திரன்வருகை.

திருஅவதாரம் திருமணம்' என்னும் இருபெருநிகழ்ச்சிகளையும் இணைக்கும் பாலமாக அமைவது விசுவாமித்திரன்வருகையாகும். திருவவதாரப்படலத்துக்குப்பின் திடீரென்று எதிர்பாராதநிலையில் விசுவாமித்திரன் தோன்றினன். இங்ஙனம் காவிய அரங்கினில் தோன்றும் விசுவாமித்திரன், திருமணம் இனிது நிறைவெய்தியதும்,

"தானுவதோர் வகையேநனி சனகன்றரு தயனும்
நானுவித முறுபோகமு நுகர்கின்றவந் நாள்வாய்
ஆனுமறை நெறிமாதவ முனிகோசிக னருளிப்
போனன்வட திசைவாயுயர் பொன்மால்வரை புக்கான்".

அப்பால் நாம் விசுவாமித்திரனைச் சந்திப்பதேயில்லை. விசுவாமித்திரன்வசத்திலே இராமலக்குமணர்கள் கையடையாக ஒப்பிக்கப்படுவது கையடைப்படலத்திற் குறிக்கப்படுகின்றது. இச்சிறுபடலம் பாலகாண்டத்தினை அழகுசெய்யும் ஓர் இனிய பூங்கொத்தாக விளங்குகின்றது. விசுவாமித்திரன் தசரதசக்கரவர்த்தியின் சபாமண்டபத்திலே தோன்றி முகமன்கூறுவதும், 'அரசெய்தியி நுந்தபயனெய்தினன்மற் றினிச்செய்வ தருளுகென்று' மன்னர்மன்னன் முனிவர்பெருமானைப் பிரார்த்திப்பதும் வெகுஉபமாகச் சித்திரிக்கப்படுகின்றன. விசுவாமித்திரன்,

"தருவனத்துள் யானியற்றுந் தவவேள்விக்
கிடையூறாத் தவஞ்செய் வோர்கள்
வெருவரச்சென் றடைகாம வெகுளியென
நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின்சிறுவர்
நால்வரினுங் கரிய செம்மல்
ஒருவனைத்தந் திடுதியென உயிரிரக்குங்
கொடுங்கூற்றி னுளையச் சொன்னன்."

இதனுள், 'தவஞ்செய்வோர்கள் வெருவரச்சென்றடை காமவெகுளியென நிருதரிடைவிலக்காவண்ணம்' என்று விசுவாமித்திரன்கூறுவதில் அம்முனிவன்சரிதம் பிரதிபலிப்பதுகாணலாம். இது, மிதிலைக்காட்சிப் படலத்திற் சதானந்தன இராமனைநோக்கிக்கூறும் விசுவாமித்திரசரிதத்திற்குத் தோற்றுவாயாகின்றது. விசுவாமித்திரனது வேண்டுகோளைக் கேட்டுத் தசரதசக்கரவர்த்தி எத்தகையதுன்பமெய்தினனென்பது,

"எண்ணிலா வருந்தவத்தோ னியம்பியசொன்
மருமத்தி னெறிவேல் பாய்ந்த
புண்ணிலாம் பெரும்புழையிற் கனனுழைந்தா
லெனச்செவியிற் புகுதலோடு
முண்ணிலா வியதுயரம் பிடித்துந்த
வாருயிர்நின் றூசலாடக்
கண்ணிலான் பெற்றிழந்தா னெனவுழந்தான்
கடுந்துயரங் காலவேலான்"

என்னுங் கவியால் வெளியிடப்படுகிறது. 'யான் ஆரணியத்திற் செய்யும் வேள்விகாத்தற்கு உனது மூத்தபுதல்வனை அனுப்பவேண்டு'மென்று விசுவாமித்திரன்வேண்டியதற்கு இத்தகைய கடுந்துயரமடைந்த சக்கரவர்த்தியின் மனநிலை, பின் அயோத்தியாகாண்டத்தில் விரித்துரைக்கப்படும் சக்கரவர்த்தியின் பெருஞ்சோகத்திற்கும் மரணத்திற்கும் தோற்றுவாயாக அமைகின்றது. அங்கு, தசரதன் தானே இராமனைக் காட்டுக்குப்போகும்படி கட்டளையிடுவதாகக்கூறும் வால்மீகியின் கதையினைக் கம்பர்,

"ஆயன நிகழும் வேலை யண்ணனு மயர்ந்து தேறுந்
தூயவ னிருந்த சூழற் றுருவினன் வருத னோக்கி
நாயக னுரையான் வாயால் நானிது பகர்வெ னென்னாத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்,"

"ஆழிசூழுலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரச னென்றாள்"

என்று மாற்றியமைப்பதற்குரிய காரணமாகிய அடிப்படையும் மேற்குறித்த கையடைப்படலச்செய்யுளில் அமைந்துகிடக்கின்றது.

"கறுத்த மாமுனி கருத்தை யுன்னிநீ
பொறுத்தி யென்றவற் புகன்று நின்மகற்
குறுத்த லாகலா வுறுதி யெய்துநாண்
மறுத்தி யோவெனா வசிட்டன் கூறினான்."

குலகுருவின்வாசகங்கொண்டு சக்கரவர்த்தி, 'திருவின்கேள்வனைக் கொணர்மின் சென்று' எனக் கட்டளையிட, அவனும், தம்பியினோடு வந்து தந்தையையடைந்தான். [இங்கு, 'திருவின்கேள்வன்' என்றது பின்வரும் திருமண்நிகழ்ச்சிக்கு ஒரு முற்குறியாகின்றது. உண்மை

யிற் சீதையையும் இராமனையும் பிரித்துப்பேசுவதே கம்பசித்திரத்திற்குப் பொருந்தியதன்று. கம்பரது காவியநாயகன் இராமனல்லன்; சீதாராமன் என்றே கூறுதல் கூடும்.]

இராமன், இலக்குவனுடன் தயரதன் விடுப்ப விசுவாமித்திரனைத் தொடர்ந்து, 'மன்னனின்னுயிர் வழிக்கொண்டாலெனச்' சென்றனனென்று கைகேயிப்படலத்திற் கூறியவர், இராமன் மீண்டும் தசரதனைச் சந்தித்தசெய்தியை,

"காவியுங் குவளையுங் கடிகொள்கா யாவுமொத்
தோவியஞ் சுவைகெடப் பொலிவதோ ருருவொடே
தேவருந் தொழுகழற் சிறுவன்முன் பிரிவதோர்
ஆவிவந் தென்னவந் தரசன்மா டணுகினன்"

என்று எவ்வளவு பொருத்தமாக வருணிக்கிறார்! இங்ஙனம், கைகேயிப்படலத்திற் கூறப்பட்ட அரசன்நிலை எதிர்கோட்படலத்தில் வாசகர்க்கு நினைப்பூட்டப்படுகின்றது. தக்க முனிவன்பாதுகாப்பில் இராமனைச் சிலநாட் பிரிந்துகூடிய அரசன்நிலையை வருணிக்கும் இக்கவி, பின் அயோத்தியாகாண்டத்திற் கூறப்படும் நெடுங்காலப்பிரிவில் அரசன் இறந்துபடுதலுக்குத் தோற்றுவாயாக விளங்குகிறது. எத்தனைபாடல்கள், எத்தனைபடலங்கள், எத்தனைநிகழ்ச்சிகள் குறுக்கிடுகின்றன! எனினும் நமது தெய்வக்கவியின் ஞாபகசக்தி தவறுவதில்லை. இவ்வளவு பொருத்தமாக அமைக்கும் சிற்பத்திறம் கம்பரைப்போன்ற மஹாகவிகளுக்கே உரியதாகும்.

தசரதனைப்பிரிந்த இராமன் விசுவாமித்திரனோடு சென்று அவன் வேள்வியைக் 'கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனன்'. வேள்வி முற்றியபின் விசுவாமித்திரன்,

"அரிய யான்சொலி னையநிற் கரியதொன் றில்லை
பெரிய காரிய முளவவை முடிப்பது பின்னர்
விரியும் வார்புனன் மருதஞ்சூழ் மிதிலையர் கோமான்
புரியும் வேள்வியுங் காண்டுநாம் எழுகென்று போனான்"

என்று வேள்விப்படலம் முற்றுப்பெறுகின்றது. தன்வேள்வி முற்றுப்பெற்றதும் மிதிலையர்கோன்வேள்வியும் காண்போமென்று விசுவாமித்திரன்கூறுவதில் எவ்வாறு திருமணநிகழ்ச்சிக்கு விசுவாமித்திரன் காரணமாயிருக்கின்றானென்பது குறிப்பிடப்பெறுகின்றது. கைகேயிப்

படலத்தில், இராமனைத் திருமணத்துக்குமுன்னரே 'திருவின்கேள்வன்' என்று குறிக்கும் கம்பர் வேள்விப்படலத்திலும் 'திருமகள்நாயகன்' என்று குறிப்பது கவனிக்கத்தக்கது. மேற்குறித்த வேள்விப்படலச் செய்யுளில், 'பெரியகாரியம்' என்று காவியத்தின் தனிப்பெருநிகழ்ச்சியும், அதனொடுதொடர்புடைய திருமணநிகழ்ச்சியும் மறைபொருளாகக் குறிக்கப்படுவது கவிசாதுரியமாகும்.

கையடைப்படலத்துக்கும் வேள்விப்படலத்துக்கும் இடையே அமைந்துள்ள தாடகைவதைப்படலம் வில்லிறுத்து வெற்றிபெறும் இராமனது கைவண்ணம் இத்தகையதென முன்னமே அறிவிக்கின்றது. வேள்விப்படலத்தைத் தொடர்ந்துவரும் அகலிகைப்படலம் இராமனது கால்வண்ணத்தை வெளியிடுவதாகும்.

"இவ்வண்ண நிகழ்ந்த வண்ண மினியிந்த வுலகுக் கெல்லாம்
உய்வண்ண மன்றி மற்றோர் துயர்வண்ண முறுவ துண்டோ
மைவண்ணத் தரக்கி போரின் மழைவண்ணத் தண்ண லேயுன்
கைவண்ண மங்குக் கண்டேன் கால்வண்ண மிங்குக் கண்டேன்"

என்பது விசுவாமித்திரன்கூற்று.

இவையன்றி, விசுவாமித்திரனாற் சொல்லப்படுங் கதைகளும் விசுவாமித்திரனைக்குறித்துச் சொல்லப்படுங் கதைகளும் பாலகாண்டத்தின் அளவைப் பெருக்குவதற்குச் சாதனமாகின்றன இத்தகைய கதைப் பூங்கொத்துக்களோடு எழுச்சி வரைக்காட்சி பூக்கொய்தல் ஆகியபடலங்களிற் பொதிந்துள்ள கவிதைப்பூந்துணர்களும் சேர்ந்து கம்பரது காவியப்பூங்கோயிலின் முன்றிற்சோலைக்கு வாடாத அழகும் இனிமையும் பெருமையும் தருகின்றன. இப்பகுதியிற் கம்பரதுகவிதை அந்திவானத்தின் அழகுசுமந்து நறுமலர்களோடு கொஞ்சும் மந்தமாருதமெனத் தவழ்கின்றது.

"நந்த நந்த வனத்தினில் நாண்மலர்க், கந்த மூந்திய கற்பகக் காவினின்
றந்தர் வந்தென அந்திதன் கைதர, மந்த மந்த நடந்தது வாடையே"

என்று நம் கவிஞர்பெருமான் வருணிப்பதுபோலவே பாலகாண்டத்தின் கவிகதி மந்தமாகநடக்கின்றது. இங்ஙனம் பிள்ளைத்தென்றல்போற் றவழ்ந்துவரும் கவிதாசக்கரம், அயோத்தியாகாண்டத்திற் கதைப்போக்கிற்கியைய மலைவீழருவியாகப்பரிணமிக்கின்றது.

[தொடரும்.]

அந்தணர் நூல்

"அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்"

என்பது தேவர்குறள். இக்குறளில்வரும் அந்தணர் என்பார் யாவர்? அவர் நூல் என்றது எதனை? என்பனவே ஈண்டு எம்மால் ஆராயப் படுவனவாம். அந்தணர் என்பது துறவோர்க்கும் பார்ப்பார்க்கும் பெயர். அது துறவோர்க்குப் பெயராதல்,

"அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்"

எனத் தேவர்கூறுமாற்று னறியப்படும். பார்ப்பார்க்குப்பெயராதல், தொல்காப்பியத்துவரும்,

"நூலே கரக முக்கோன் மணையே
யாயுங் காலை யந்தணர்க் குரிய" (மர—எ0)

என்னுஞ் சூத்திரத்தானும்,

"அந்த ணாளர்க் குரியவு மரசர்க்
கொன்றிய வரூஉம் பொருளுமா ருளவே" (மர—எக)

என்னுஞ் சூத்திரத்தானும் அறியப்படும். இவற்றால் எங்ஙனம் அறியப்படுமெனின், 'அந்தணர்க்குரிய; அரசர்க்குரியவுமுள' எனச்சாதி பற்றிக்கூறினமையானும், நூல் கரகமுதலியன பார்ப்பார்க்கே யுரியவாத லானு மென்பது.

அவ்விரண்டனுள்ளும் பார்ப்பாரையே ஈண்டு அந்தணர் என்றது உணர்த்திற்று. அஃது எதனாற்பெறப்பட்டதெனின், அவரொடு நூலைப்புணர்த்தினமையா னென்பது. நூலைப்புணர்த்தினமையான் எவ்வாறுபெறப்படுமெனின், அது, நூல் என்றது இதனை; எனத் துணிந்ததுணையானே பெறப்படும் என்பது. அற்றேல் அஃதாக; நூல்

என்றது எதனையோ எனின், அவர்க்குரிய வேதநூலையேயாமென்க. வேதநூல் அவர்க்கே உரியதென்பது,

"அந்தண ரருமறை மன்ற லெட்டனுள்" (இறை—அக. க) எனவும்,

"அளவிற்கோட லந்தணர் மறைத்தே" (தொல். எழுத். பிறப். 20) எனவும்,

"அந்தணராவோ ராறுதொழில்பூண்டுள்ளோர்
செந்தழலோம்பிமுப்போது நியமஞ்செய்து
தந்தவநற்கருமத்து நின்றாங்கிட்டுச்
சந்தியுமோதிச்சடங்கறுப்பார்களே" (திருமூலர் திருமந்திரம்)

எனவும் பிறண்டு மெல்லா மவர்க்கேயுரியவாகக்கூறுமாற்றா னறியப் படும். அன்றியும், இந்நூலாசிரியரே, பின்னும்,

"ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்"

என அரசன்கோல் அந்தணர் நூற்கு ஆதியாமாற்றை எதிர்மறைமுகத் தானுங் கூறுமிடத்து, 'அறுதொழிலோர் நூன்மறப்பர்' எனக் கூறித் தாம் முற்கூறிய அந்தணர் பார்ப்பார் எனவும், அவர் நூல் வேதநூல் எனவும் விளங்கவைத்தமையானும் அறியப்படும். 'அறுதொழிலோர் நூன்மறப்பர்' என்றதனால் எவ்வாறு விளங்கவைத்தாரெனின், அறு தொழிற்குரியார் பார்ப்பாரேயாதலானும், அவரோதற்றொழிற்குரியது வேதமே யாதலானும் அவ்விருவகையுரிமையாற்றான் விளங்கவைத்தா ரென்க. அறுதொழிற்குரியார் பார்ப்பாரென்பதை "அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்" (தொல்—புற. ௨0) என்னுஞ் சூத்திரத்தானும்,

"ஓதல் வேட்ட லவைபிறர்ச் செய்தல்
ஈத லேற்றலென் றாறுபுரிந் தொழுகும்
அறம்புரி யந்தணர் வழிமொழிந் தொழுகி" (பதிற்றுப்பத்து)

என்பதனானும், அவ ரோதற்குரியது வேதம் என்பதனை,

"அங்கமும் வேதமு மோது நாவர் அந்தணர் நாளு மடிபரவ"

எனத் திருஞானசம்பந்தர் கூறுமாற்றானும்,

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"

எனத் தேவர்கூறுமாற்றானும்,

"ஒத்த முயற்சியா னொத்து வெளிப்படினும்
நித்திய மாக நிரம்பிற்றே—யெத்திசையும்
தாவாத வந்தணர் தாம்பயிற்றிக் காவிரிநாட்
டோவாத வோத்தி னொலி"

என்பதனானும் அறிக. இன்னும், இந்நூற்பாயிரத்து,

"செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்"

என வெள்ளிவீதியாரென்னுஞ் சங்கப்புலவர் கூறுமாற்றானு மறிக. அறியவே, 'அந்தணர் நூல்' வேதம் என்பதூஉம், அதனைத் தேவர் பெரிதும் போற்றிக்கூறினர் என்பதூஉம் அறியக்கிடந்தமை காண்க. எங்ஙனம் போற்றிக்கூறினர் எனின், 'அரசன்கோலே அந்தணர் நூற்கும் அறத்திற்கு மாதி' ஆகையால் அவற்றை அரசன் காக்கவேண்டும். காவாவழி உலகியல் நடைபெறாது என அவற்றின் இன்றியமையாமைகூற லான் என்பது. வேதம் உலகியற்கின்றியமையாததென்றது என்னையோ வெனின், உலகவொழுக்கிற் கின்றியமையாத நீர்க்குக்காரணமாகிய வேள்வியைச்செய்தற்கு வேதமந்திரங்களே காரணமாதலின என்பது. அதுபற்றியே அதனை அரசன் காக்கவேண்டுமென்றார். காத்தலாவது அதனை அவ ரோதற்குவேண்டிய துணைபுரிதல். இவ்வேதவேள்விக்கு வேண்டிய நெய்முதலிய அவிபை யீதலின் ஆவையும் உணவுமுதலிய வுதவி அரசன் காக்கவேண்டுமென்பார் 'ஆபயன்குன்றும்' என அதனை யும் உடன் கூறினர். ஆவும் அந்தணர் நூலும் வேள்விக்குக் காரணம் என்பதனை,

"உகந்தவத் தேனு தந்த வுயர்பெருஞ் சுரபி யங்கெம்
மகந்தழைத் திடநின் றுள்ளது" (இரகு—கு—௬௧)

என்பதனாலும்,

"பரத்தொடு வினைத்தொகை யடர்த்தனர் பயன்றேர்
சுரத்தொடு தொனிக்குமறை யாகவுழை தோறும்" (இரகு)

என்பதனாலும்,

"அங்க மாறு மருமறை நான்குந்—தங்குவேள்வியர்"

என்னும் நாவுக்கரசர்தேவாரத்தானும், வேள்வி மழைக்குக்காரண மாதலேயும், அதனால் நிலஞ் சிறக்கும் என்பதனையும்,

"அரிவருசெவ் வெயில்காட்ட வரவிந்தம் விகசிதஞ்செய் வதுவே போல
வெரிவருநல் லாகுதிநீ செயமாரி வான்றரலா விமைப்பி லாதார்
பரிவருகற் பகநறிய மலர்க்குளிர்நீ ழலிற்சிறந்த பதியே போலத்
தெரிவருநின் றிருவருளா லரசுசெய நிலமேழுஞ் சிறந்த வன்றே"
(இரகு—குறை. ரு௦)

என்னுஞ் செய்யுளானும் அறிக. அன்றியும்,

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக"

என்னுந் தேவாரத்துக்கூறிய முறையானும் ஓர்ந்துணர்க. இன்னும், இத்தேவாரத்தின்கருத்தைவிளக்கிச் சேக்கிழார்கூறிய,

"அந்தணர் தேவரா னினங்கள் வாழ்கவென்
றிந்தமெய்ம் மொழிப்பய னுலக மின்புறச்
சந்தவேள் விகண்முதல் சங்க ரர்க்குமுன்
வந்தவர்ச் சனைவழி பாடு மன்னவாம்"

"வேள்வி நற்பயன் வீழ்புன லாவது
நாளு மர்ச்சனை நல்லுறுப் பாதலால்
ஆளு மன்னனை வாழ்த்திய தர்ச்சனை
மூளு மற்றிவை காக்கு முறைமையால்"
(பெரிய—ஞா—அ௨௧, அ௨௨)

என்னும் செய்யுள்களானும் அறிக.

இங்ஙனம் வேதவேள்வியைத் தேவ ரங்கீகரித்திருப்பவும், சிலர்,

"அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று"

எனத் தேவர் மறுத்துக்கூறினர் என்பர். தேவர் மறுத்துக் கூறினாரல்லரென்பது, அக்குறளி னுண்மைப்பொரு ளிஃதென

ஆராய்ந்து துணியுமாற்றானே தெளியப்படும். ஆதலின், அத னுண்மைப்பொருள் யாது என ஈண்டு ஆராய்வாம்.

அக்குறளில்வரும் 'வேட்டலின்' என்பதில் வரும் இன் உறழ்பொருளில்வந்த ஐந்தனுருபாகும். ஐந்தனுருபுக்கு உறழ்பொருளுண்மை "ஐந்தாகுவதே—இனனெனப் பெயரிய" என்னுந் தொல்காப்பியச்சூத்திரத்துச் சேனாவரையருரையான் அறியப்படும் படவே, ஆயிரம் வேள்விவேட்டலினும்பார்க்க என்பது பொருளாகும். ஆகவே, ஆயிரம் வேள்விவேட்டலாலடையும்பயனினும்பார்க்க ஒருயிரைக் கொன்றுதின்னாமையால்வரும் பயன் பெரிது; ஆதலால் அதனை அருளுடையார் பெரிதுங் காக்கவேண்டும் என்பதே அதன் உண்மைப்பொருளாம். இங்ஙனமே இன்னுருபை உறழ்பொருளில்வைத்து,

"நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு"

எனத் தேவர் பிறாண்டுமெல்லாங் கூறுதல் காண்க. ஆகையால் வேள்வியைத் தேவர் மறுத்தார் என்பது பொய்யுரையேயாம்.

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று"

என்னுங் குறள், பொய்கூறாதவனைப் பிற அறஞ் செய்யவேண்டாமென்று விலக்கியதன்று; பிற அறங்களின்பயனையெல்லாம் இஃதொன்றே தரவல்லதெனக் கூறிற்றாம். அதுபோலவே இதுவும் என்பது. இன்னும், தேவர் அக்குறளில் உயிர்செகுக்காமைநன்று என்னாது, 'செகுத்துண்ணாமை நன்று' எனக் கூறியதூஉம் அவர்க்கது கருத்தன்றென்பதை வலியுறுத்தும். அன்றியும், அவர் கூறிய "நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்—கொன்றாகு மாக்கங் கடை" என்னுங் குறளும் அதனை வலியுறுத்துமாறு காண்க. எதனால் வலியுறுத்துமெனின், "இன்பமிகுஞ்செல்வம்பெரிது" என இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும், துறவோர்க்கு அவ்வாக்கங் கடை என விதித்தமையான் என்பது. ஏன் அவ்வாக்கங் கடை எனின், வேள்விப் பயனாகிய துறக்கமுதலிய செல்வம் மீளவும் பிறவிக்கேதுவாகலினென்பது. அதுபற்றியே மணிவாசகரும், "வானேயும்பெறில்வேண்டேன்" என்றார்.

பக்குவமில்லாப் போககாமிகளாகிய உலகர்செய்யும் வேள்வி முதலியன பக்குவமுடைய முத்திகாமிகளாகிய துறவிகளாலே இகழப் படும். அதுபற்றிப் பக்குவமில்லார்செய்யும் வேள்விமுதலியன எல்லா ரானும் இகழப்படத்தக்கனவன்று, பக்குவம்பற்றியே வேதமும் கரும காண்டம் ஞானகாண்டம் எனப் பகுக்கப்பட்டது. இவ்வாறு பகுக்கப் பட்ட வேதத்தினுண்மைப்பொருளை அறியாதபடியாலும், பக்குவ முற்றுத் துறவுபூண்டமையானுமே புத்தனும் அதனை இகழ்ந்தனன். உயிர்க்கொலைபற்றி வேள்வி இகழப்படுமாயின், அரசதருமமென விதிக் கப்பட்ட போரும் (தண்டமும்) எத்தனையோ உயிர்கள் இறத்தலின் இகழப்படவேண்டும். அதனை இகழுவாரை யாம் அறியேம். ஆத லின் வேள்வியும் இகழப்படாது. போர் இம்மைப்போகத்துக்கு உரியது. வேள்வி மறுமைப்போகத்துக் குரியது. ஆதலின் இரண்டும் பக்குவமில்லா உலகர்கட்கே உரியனவாம். இவற்றைப் பக்குவமுற்றுத் துறவுபூண்டோர் விரும்பார். ஆதலாற்றான், 'நரைவருமென்றெண்ணி நல்லறிவாளர்'ஐப் துறவுபூண்ட புத்தனும் இவ்விரண்டையும் வெறுத் தான். அவன் வெறுத்தமைபற்றி எல்லாரும் வெறுக்கமாட்டார்; பக்குவம்நோக்கி வேள்வி விதித்த வேதமும் நிந்திக்கப்படமாட்டாது. நிந்திப்போர் வேதநிந்தகரென விலக்கப்படுவார். வேள்விக்குரியார் இவர், அல்லார் இவர் என வேதம் விதித்தவாறே தேவரும், மேற் காட்டிய,

"நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை"

என்னுங் குறளால் விதியும் விலக்கும் உடன் கூறினர்.

[வேள்வியொன்றுமே பயன்தரமாட்டா. பயன்றருமென்பது மயக் குரையென்பார்க்குப் புத்திரகாமேட்டிசெய்து தசரதனுக்குப் பயனளித்த இருசியசிருங்கன்போன்ற வல்லாரான் வேட்கப்படுமாயின் அஃதும் உண்மையிற் பயன்றருமென விடுக்க.]

இங்ஙனமே வேள்வியை வேதம்விதித்தவாறே தேவரும் விதித் திருப்பவும், அதனை விதித்திலரென அவர்கருத்தோடு மாறுபட்டுரைப் பார்க்கு யாம் என்கடவேம். அவ்வளவில் அவர் மகிழ்க என விடுப்பதே கடவதாகும். வேள்வியைப்பற்றிக்கூறும் குறள்களி னுண்மைப்பொருளை

யாம் உற்றுநோக்கும்போது தேவர் வேதமொழியைப் பெரிதும் அங்கி கரித்தே நூல்செய்தார் என்பது திண்ணம்.

இன்னும், தேவர் வேள்வியைமாத்திரமன்று; வேதத்திற்சொல்லிய வருணாச்சிரமதருமங்களையும் அங்கீகரித்தே நூல்செய்துள்ளார். அவற்றையும் இங்கே காட்டுதும். வருணங்களை அங்கீகரித்தமை,

"மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்" எனவும்,

"கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி" எனவும்

"வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்" எனவும்,

"ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்"

என்வும் வருங் குறள்களானும்,

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு"

எனப் பொதுவாகக்கூறிய குறளானும், ஆச்சிரமங்களை அங்கீகரித்தமை,

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை"

என்னுங் குறளானும், இல்லறம் துறவறம் எனப் பகுத்துக்கொண்டமையானும் அறியப்படும்.

இன்னும், தத்துவங்கடந்த அருவப்பொருளை வேதம் "சத்து" எனக் கூறியவாறே, தேவரும் "மெய்" எனவும், "உள்ளது" எனவும் கூறுவர்.

இவ்வாற்றானும், தேவர் பெரிதும் வேதமொழியை அங்கீகரித்தே நூல்செய்தாரென யாம் மேற்கூறியதே திடமாதல் காண்க.

இனித்தேவரன்றித் தொல்காப்பியரும் தா மியற்றிய தொல்காப்பியமென்னும் இலக்கணநூலுள்ளே வேதத்தையும், அதிற்சொல்லிய

வருணாச்சிரமதருமங்களையும் பெரிதும் அங்கீகரித்துக் கூறியுள்ளார். அத்தொல்காப்பியமோ இப்போது காணப்படும் தமிழ்நூல்களுள்ளே மிகப் பழையதென யாவரானும் ஒப்புக்கொள்ளப்பட்டதாதலின், அதன் கண்ணும் அவைகள் கூறப்பட்டிருத்தலை யாம் இங்கே எடுத்துக்காட்டுதல் யாவர்க்கும் பயன்றருமாதலிற் காட்டுதும்.

அந்நூலின்கண், அந்தணரும் மறையும் அங்கீகரிக்கப்பட்டமை முன்னரே மேற்கோளாக அங்கங்கே எடுத்துக்காட்டப்பட்டன. அவற்றை அங்கங்கே உணர்ந்துகொள்க. இனிக் காட்டப்பட வேண்டியன ஏனையவே. அவற்றுள்,—ஒழிந்தவருணங்கள்கூறப் பட்டமையை, "அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்னுஞ் சூத்திரத்தினுள்,

"ஐவகை மரபி னரசர் பக்கமும்
இருமூன் று மரபி னேனோர் பக்கமும்"

என்னும் அடிகளானும்,

"வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை"

என்பதனானும்,

"வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்ல
தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"

என்பதனானும், ஆச்சிரமங்கள் கூறப்பட்டமையை, "நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்" என்பதனானும், "நூலே கரகம் முக்கோன் மணையே" என்பதனுள், முக்கோல் கூறினமையானும், பிறவாற்றானும், தருமங்கள் கூறப்பட்டமையை, அகத்திணை புறத்திணையியல்களானும் பிறவாற்றானும் அறிக

இனி, வேதத்திற்கூறிய சத்து என்னும் பொருளை அவர் கூறிற்றிலரோ எனின், தாமியற்றியது இலக்கணநூலாதலிற் கூறிற்றிலர் என்க. "கொடிநிலைகந்தழிவள்ளி" என்னுஞ் சூத்திரத்துவரும் 'கந்தழி' என்பதற்கு நச்சினார்க்கினியர் தத்துவங்கடந்த அருவப்பொருள் (=சத்து) எனப் பொருளுரைத்தலின் வேதத்திற் கூறியவாறே கூறினாரென்றல் பொருந்தாதோ எனின், கந்தழி என்பதற்கு அப்பொருள் துணி

பொருளாயினன்றே பொருந்தும்; இளம்பூரணரும் வெண்பாமாலைகாரும் வேறுபொருளுரைத்தலின் அவருரை துணிபன்றென்க. துணிபாயின் அதுவும் பொருந்தும் என்க.

இன்னும், வேதத்திலே விண்டு இந்திரன் வருணன் முதலிய தேவர்கள் கூறப்பட்டிருத்தல்போலவே, தொல்காப்பியத்தின் கண்ணும்,

"மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்"

எனப் பல தேவர்கள் கூறப்பட்டிருக்கிறார்கள். சேயோன் சிவனுடைய கூறாதலின் அதுவும் வேதத்திற் கூறப்பட்டதேயாம். சிவன் என்னுந் தெய்வம் வேதத்திற் கூறப்பட்டுளதோ எனின், இருக்குவேதத்திலே,

"ரூவொஈாஜா நஃஜூஈஸ்ரூஈ ரு௫ுஂ......சுவவெஸகுரு ணஈ ஜூஂ।

"யஜ்ஞத்துக்குராஜாவாக உங்களைக் காக்கும்பொருட்டு உருத்திரனை நாடுக" (௪-௩-௧) என உருத்திரன் என்னுந் தெய்வம் கூறப்பட்டிருத்தலினாலும், அதனையே அவ்வேதத்தில் "ஸ்தொஈஂவொஈசுஃ௫ுஈஈ ரு௫ுாய ஶிக்ஷவெஸக்ஷய ஹிஈாய நஃவஸா திதிஷ்டநு। யெஹிஶ்ஶிவ ஸ்வாடெநவ யாவஹிஜ்லிவஃ ஹிக்ஷஜிஸ்ஸயஶா நிகாஃஹிஃ"॥ என்பதில் ஶிவஃ (சிவன்) எனக் கூறப்படுதலினாலும் அதுவுங் கூறப்பட்டுளதேயாம். இச்சிவன் என்னும் பெயர் தொல்காப்பியத்திற் கூறப்படாதது இலக்கணநூலாதலிற்போலும். அன்றிச் சேயோனே சிவனாதலிற் கூறப்பட்டதெனினு மமையும். இங்ஙனமே வேதப்பொருளைத் தொல்காப்பியரும் அங்கீகரித்துக்கூறுதல் காண்க.

சிலர் இருக்குவேதத்திற்கூறப்படும் விட்டுணு என்னும் பெயரும் உருத்திரன் என்னும் பெயரும் விட்டுணு உருத்திரன் என்னுந் தெய்வங்களைக்குறித்து வந்தில வென்பர். அவர்கூற்றுப் பட்டப்பகலை யிரவென்பார்கூற்றுப்போலுமாகலின் அதன்கண் ஆராய்ச்சியின்றென்பது.

இன்னுஞ்சிலர், உருத்திரன் என்பதற்குப் பகைவரை அழுவிப் போன் எனவும், உயிர்களிடத்துள்ள அஞ்ஞானநிமித்தந் துயருறுவோன் எனவும் உண்மைப்பொருள்கூறுது' முழக்கமிடுவோன் எனத் திரிபுப் பொருள்கூறுவர். ஊழிக்காலத்தில் உலகத்தை அழித்துநின்று முழங்குபவர் எனப் பொருள்கொள்ளுங்கால் அதுவும் பொருந்தும். ஊழிக்காலத்திலே பிரசண்டவாயுக்களோடுவந்து உலகங்களை அழித்த லின், உருத்திரனை மருத்துக்களுக்குத்தெய்வமென வேதங்கூறிற்று என்க.

இதுகாறுங்கூறியவாற்றுனே தேவர்கூறிய அந்தணர்நூல் வேத மென்பதும், அதிற்சொல்லிய வருணுச்சிரமதருமங்களையெல்லாம் தேவர் அங்கீகரித்துள்ளாரென்பதும், முதற்சங்கத்திறுதியிற்செய்யப் பட்ட தும் இப்பொழுதுள்ள தமிழ்நூல்களுளெல்லாம் மிக முற்பட்டதுமா கிய தொல்காப்பியத்திலும் வேதவிதிகளாகிய வருணுச்சிரமதருமங்களை அங்கீகரித்து அந்நூலாசிரியர் கூறியுள்ளாரென்பதும் அறியக்கிடத்தல் காண்க.

சி. கணேசையர்.

உ

பிழை திருத்தம்.

சென்ற ஆடிச்செந்தமிழ்ப்பகுதியிலே உகூஎம் பக்கம் உகூம் வரியில், பொருளாக என்றிருப்பதை வினைமுதலாக எனவும், உச-ம் வரியில் அதுவே என்றிருப்பதை அதனையே எனவும், உகூஅ-ம் பக்கம் உகூ-ம் வரியில் ஏற்கமாட்டாதாதலின், உருபு தன்னை என்றிருப்பதை ஏற்க மாட்டாதாதலின் தன்னை எனவும், உச-ம் வரியில் பெயர்த்தன்மை யெய்திநின்ற என்னும் என்றிருப்பதை, பெயர்த்தன்மையெய்திநின்ற உருபு என்னும் எனவும், உகூகூம் பக்கம் கூம் வரியில் பொருளிற்றீர்ந்து என்றிருப்பதை, பொருளிற்றீராது எனவும் திருத்திப் படித்துக்கொள்க.

சி. கணேசையர்.

தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் உதவிப்பதிப்பாசிரியர் ப்ருஹ்மஸ்ரீ
P. S. சுப்பிரமணியசாஸ்திரி (M.A., L.T.,) அவர்கள் எழுதுவது.

கிளவியாக்கம்.

"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே
யஃறிணை யென்மனா ரவரல பிறவே
யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே."

'இசைக்குமன் சொல்லே' என்று சேனாவரையர் காட்டிய பாட பேதம் இப்பொழுது பதிப்பித்துள்ள இளம்பூரணத்துடன்கூடிய தொல்காப்பியத்திலும், நச்சினார்க்கினியத்துடன்கூடிய தொல்காப்பியத் திலும் காணப்படுகின்றது. பழைய ஏடுகளிற் புள்ளியிட்டு எழுதாமை யால், 'இசைக்குமன் சொல்லே' என்பதே, 'இசைக்குமன சொல்லே' என்று படிக்கப்பட்டதுபோலும்.

இவ்வதிகாரத்திற் சொல்லைப்பற்றி ஆசிரியர் தொல்காப்பியனார் உணர்த்துவதால், இது சொல்லதிகாரம் என்று பெயர்த்தாயிற்று. சொல்லின் இலக்கணம் யாது ? தொல்காப்பியனார் பெயரியலில் 'எல்லாச் சொல்லும் பொருள்குறித்தனவே' என்றார். அஃதாவது பொருள் குறித்ததெல்லாம் சொல் என்பதாம். ஆயின், குறிப்பினுணர்த்தும் சைகையும் பொருள்குறிப்பதால், அதனில் அதிவியாப்தி வந்து விடுமோ என்று எண்ணி, உரையாசிரியர், 'சொல் என்பது எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசை' என்றாரெனக். இப்படி இலக் கணங்கூறின், ஓரெழுத்தொருமொழியில் அவ்வியாப்திவந்துவிடு மென்றுநினைத்து 'எழுத்தொடு' என்பதற்கு 'எழுத்தாதற்றன்மை யொடு' என்றே உரையாசிரியர் நினைத்திருக்கவேண்டும் என்று கூறிச் சேனாவரையர் 'சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையா னொற்றுமை யுடைத்தாய்ப் பொருள்குறித்துவருவது' என்று, சொல்லிலக்கணங் கூறினர் என்க. ஒருபுடை என்பதும் ஏகதேசம் என்பதும் ஒரு பொருட்கிளவி. நச்சினார்க்கினியர் 'சொல்லென்றது எழுத்தினான் ஆக் கப்பட்டு இருதிணைப்பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவி

யாம் ஓசையை' என்று சொல்லி, பின் 'இனிச் சேனாவரையர் சொல் பொருள்குறித்துவருமென்றாராலெனின், ஒருவன் பொருட்டன்மையை உணர்தற்குச் சொல் கருவியாய்நிற்றலன்றித் தனக்கு ஒருணர்வின்மையின் தான் ஒருபொருளைக் கருதிநிற்ற லின்றென மறுக்க' என்று சேனாவரையரை மறுத்தனர். ஆனால், சேனாவரையர் சொல் கருவியாய்நில்லாது என்று கருதினர் என்பதற்குப் பிரமாணந் தெரியவில்லை. அன்றியும், 'எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தை நச்சினார்க்கினியர் இங்கு மறந்துவிட்டார்போலும். மேலும், 'எழுத்தினான் ஆக்கப்பட்டு இருதிணைப்பொருட்டன்மையும் ஒருவன் உணர்தற்குக் கருவியாம் ஓசை' என்று அவர் சொன்னதே சொல்லின் இலக்கணமாயின், இடைச்சொல் உரிச்சொற்களில் அவ்வியாப்தி வரும்.

அதிகாரம் என்ற சொற்கு உரையாசிரியரும் நச்சினார்க்கினியரும் 'முறைமை' என்று பொருள்கொள்ளுகின்றனர். 'முறைமை' என்பதன்பொருள் நன்குவிளங்கவில்லை. வரிசை என்று பொருள்கொண்டால், சொல்லதிகாரம் என்பதற்குச் சொல்லை உணர்த்திய (சூத்திர) வரிசை என்று பொருள்கொள்ளலாம். ஆனால், '𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌃' என்னும் வடசொற்கு வரிசை என்று பொருள் உண்டோ என்பது தெரியவில்லை.

தாமோதரம்பிள்ளையவர்கள்பதிப்பித்த சேனாவரையத்தில் 'தனிமொழியாவது சமயவாற்றலாற் பொருள்விளக்குவது' என்று காணப்படுகின்றது. சைவசித்தாந்தநூற்கழகப்பதிப்பிலோ சமயவாற்றல் என்பதற்குப் பிரதியாகச் சமவாயவாற்றல் என்று எழுதி, அதற்குக் காரணமும் கீழ்க்குறிப்பிற் கண்டிருக்கிறது. அந்தக்காரணத்தைப்பற்றி இங்கு ஆராயவேண்டுவதில்லை. சமயவாற்றல் என்பது *𑌸𑌙𑍍𑌕𑍇𑌤-𑌶𑌕𑍍𑌤𑌿𑌃 என்பதன் மொழிபெயர்ப்பாம். அஃதாவது இந்தச்சொல்லுக்கு இது தான் பொருள் என்று கடவுளால் ஏற்படுத்தப்பட்ட சங்கேதந்தான் சமயவாற்றல் என்பதாம். இதைக் கருத்தில்வைத்துக்கொண்டுதான் இலக்கணவிளக்கத்தில், 'தனிமொழி சமயவாற்றலாற் றனித்துந், தொடர்மொழி யவாய்நிலை தகுதி யண்மையிற், றொகைநிலை........தோற்றுவதியல்பே' என்ற சூத்திரத்தில் (161) சமயவாற்றல் என்னுஞ்சொல்லை

* 𑌅𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌪𑌦𑌾𑌤𑍍 𑌅𑌯𑌂 𑌅𑌰𑍍𑌥𑌃 𑌬𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌃 𑌇𑌤𑌿 𑌈𑌶𑍍𑌵𑌰 𑌸𑌙𑍍𑌕𑍇𑌤𑌃 𑌶𑌕𑍍𑌤𑌿𑌃

அந்நூலாசிரியர் ஆண்டிருக்கிறார். அவாய்நிலை என்பது [1]ஆகாங்க்ஷா என்பதற்கும், தகுதி என்பது [2]யோக்யதா என்பதற்கும், அண்மை என்பது [3]ஸந்நிதி: என்பதற்கும் மொழிபெயர்ப்புக்களாம்.

'கிளவியாக்கம்' என்று இவ்வோத்துக்குப் பெயர் வந்ததற்கு 'வழுஉக்களைந்து சொற்களை யாக்கிக்கொண்டமையாலும், சொற்கள் பொருள்கண்மேலாமாறு உணர்த்தினமையாலும்' என்று இரண்டு காரணம் சேனாவரையர் கூறுகின்றார். பின்சொன்னகாரணம் இவ்வோத்தில் முதல் 12 சூத்திரத்துக்கும், முன்சொன்னது 13ம் சூத்திரம் முதல் பின் சூத்திரங்களுக்கும் பொருந்தும்.

'மக்கட்சுட்டு' என்பதன் பொருள்:—

உரையாசிரியர்—மக்களென்று சுட்டப்படும் பொருள்.

சேனாவரையர்—மக்களென்று கருதப்படும் பொருள் [மக்களாகிய சுட்டு (கருத்து) யாதன்கண் நிகழும் அது மக்கட்சுட்டு]

நச்சினார்க்கினியர்—மக்களாகிய நன்குமதிக்கப்படும் பொருள்.

சேனாவரையர்மதப்படி, தூணை மகனென்று நினைத்தாலும், அஃது உயர்திணை: ஆகையால், அவர்கொண்டபொருள் மெய்யுணர்வுக்கும் (ப்ரமா), திரிபுணர்ச்சிக்கும் (ப்ரமை) பொருந்தும். ஆனால், நச்சினார்க்கினியர் கொண்டபொருள் மெய்யுணர்வுக்குத் தான் பொருந்தும்: ஆதலால், அவர்மதப்படி தூணைக்கண்டு மகன என்று கருதியவழி அஃறிணையே உபயோகிக்கவேண்டும். உலகவழக்கிலோ உயர்திணையே காணப்படுகிறது. மேலும், சூத்திரத்தின்பொருள் சொல்லுமிடத்து மக்கட்சுட்டு என்பதற்கு மக்களென்று கருதப்படும் பொருள் என்று பொருள் கொடுத்துவிட்டு, பின் 'மக்களாகிய சுட்டு யாதன்கண் நிகழும் அது மக்கட்சுட்டு' என்று சேனாவரையர் சொல்லியிருப்பது தவறு என்று நச்சினார்க்கினியர் மறுக்கிறார். ஆனால், 'கருதப்படும்' என்னுஞ் சொல்லின் தாற்பரியத்தை ஊன்றிப்பார்த்தால் இருவகையாய்ச் சொன்னதற்கும் பொருளில் மாறுபாடு ஒன்றும் இல்லையென்றே தோன்றுகிறது.

---

[1]ஶப்தஸ்ய ஶப்தாந்தரவ்யதிரேகப்ரயுக்தாந்வயாநநுபாவகத்வம் ஆகாங்க்ஷா. [2]அபாதிதார்த்தத்வம் யோக்யதா. [3]ஶப்தாநாம் அவிலம்பேந உச்சாரணம் ஸந்நிதி:.

'ஆயிருதிணையின்' என்பதன் பொருள்:—

உரையாசிரியர்—ஆயிருதிணையினை.

சேனாவரையர்—ஆயிருதிணையின்கண்.

நச்சினார்க்கினியர்—ஆயிருதிணையினை.

சேனாவரையர் ஏழாம் வேற்றுமைத்தொகை என்பதற்கு ஞாபகமாகத் தொல்காப்பியத்திலுள்ள சூத்திரங்களையே காட்டுகின்றார். நச்சினார்க்கினியர் சான்றோர்செய்யுளைக் காட்டுகின்றார். சான்றோர் செய்யுளுக்கு ஆதாரம் எது என்று தேடவேண்டியிருத்தலாலும், தொல்காப்பியச் சூத்திரங்கள் இப்பொழுது நேரில் உள்ளமையாலும் அனுமித சுருதியை விடப் பிரத்தியக்ஷசுருதிக்குப் பலம் அதிகமென்று நினைத்து, சேனாவரையர் ஏழாம்வேற்றுமைத்தொகையென்று கருதினார்போலும்.

'உயர்திணை' என்னுஞ் சொல்லின் தொகைவிரி. (விக்ரஹ:)

சேனாவரையர்–பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

நச்சினார்க்கினியர்–இறந்தகாலவினைத்தொகை; அஃது ஆகுபெயராய் அப்பொருளை உணர்த்திநின்றது.

நச்சினார்க்கினியர்கொள்கைப்படி, உயர்திணை என்பது உயர்ந்த திணை என்று விரிந்து, திணை என்பது திணைப்பொருளைக்குறிப்பது என்றாகும்; ஆயின் உயர்ந்த என்பது திணைப்பொருள் என்பதிலுள்ள திணையோடு அன்னுவயிக்கவேண்டும். அப்பொழுது ஏகதேசான்னுவயம் என்னுங் குற்றம் வரும். மேலும், திணை என்னுஞ் சொல்லுக்குச் சமயவாற்றலாற்கிடைக்கும் பொருளை வைத்துக்கொண்டே தொகையை விரிப்பது சாத்தியமாயிருக்கும்பொழுது, எளிதான அவ்வழியை விட்டு ஆகுபெயரால்வந்தபொருளைக் கொள்வது கௌரவம் (கௌரவ:) அல்லது மிகை என்னுங் குற்றத்துக்குஇடமாகும். மேலும், அஃறிணை என்பதை இருவரும் பண்புத்தொகையாகவே கொள்ளவேண்டும். ஆதலால், உயர்திணை அஃறிணை என்ற இரண்டையும் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையாகவே கொள்வது பொருந்துமோ வென்று தோன்றுகிறது.

சூத்திரத்தில் 'அவரல' 'பிற' இவ்விரண்டும் வேண்டுமோ ?

'அவால' மட்டும் இருந்தால், [1]'நஞிவயுக்தமந்யஸத்ருசே' என்னும் பிரமாணத்தால் உயர்திணைக்கு ஒத்து அதனினின்று வேறுபட்டு மக்கள் அல்லாத உயிரோடுகூடிய உயிர்களே அஃறிணையாகும்: அதனால், உயிரில்லாதனவும் அஃறிணையே என்றுகாட்டப் 'பிற' என்றார். இக் கருத்தையே 'அவ்வுயர்திணையல்லனவெல்லாம் அவ்வுயர்திணைபோல ஓரினத்த அல்ல; தத்தம் வகையான் வேறுபட்டன, உயிருடையனவும் உயிரில்லனவும் என்பது' என்னும் வாக்கியத்தால் உரையாசிரியர் குறிப்பாகக் காட்டியுள்ளார். சேனாவரையரோ 'இனி அவாலவென்றேயொழியின் அவற்றது பகுதியெல்லாம் எஞ்சாமற் றழுவாமையின், எஞ்சாமற்றழுவுதற்கு அவால பிறவென்றார்' என்று சொல்லுகிறார். அஃதாவது 'பிற' என்பது இல்லாவிடில் 'அவால' என்பதனால் உயர்திணையல்லாத ஏதாவது இரண்டை[2] எடுத்துக்கொண்டு அவை அஃறிணையென்று பொருள்கொண்டுவிடலாம். உயர்திணையல்லாத எல்லாவற்றையும் அஃறிணையென்று கொள்வதற் காகப் 'பிற' என்ற சொல்லைச் சூத்திரத்தில் வைத்தார் என்க. ஆனால் இதைவிட உரையாசிரியர் குறித்த பொருளே மிகப் பொருந்துமென்று தோன்றுகிறது. நச்சினார்க்கினியர் 'இச்சூத்திரத்தாற் பொருளிரண்டு சொல்லிரண்டென வரையறுத்தார்' என்று சொல்லுகிறார். அப்படி யாயின், [3]வாக்கியபேதம் என்னுங் குற்றம் வரும்; 'இவ்வாறு ஒரு

---

1 ந, இவ என்னும் (வட) சொற்களைச் சார்ந்துவருஞ் சொல் ஒத்த வேற்றுப்பொருளைக் குறிக்கும் என்பது பொருள். அப்பிராமணன் என்றவிடத் துப் பிராமணனை ஒத்து வேறுபட்ட மற்றமனிதரைக் குறிக்குமேயொழிய அவ் வன்மை அஃறிணைப்பொருளைக் குறியாதென்பது கருத்து.

2 இங்கு கபிஞ்ஜலாதிகரண ந்யாயத்தை மனத்தில் வைத்துக்கொண் டார்போலும். அஃதாவது – 'கபிஞ்ஜலாந் ஆலபேத' (கபிஞ்சலபக்ஷிகளைக் கொண்டு யாகஞ்செய்க) என்ற வாக்கியத்தில் கபிஞ்ஜலாந் என்ற பன்மை உலகத்து எல்லாக்கபிஞ்சலங்களையும் உணர்த்தாது பன்மைக்குக் குறைந்தது மூன்றாவதுவேண்டுமாகையால் 'மூன்று கபிஞ்சலங்களைக்கொண்டு யாகஞ் செய்க' என்று முன்னோர்களாற் பொருள்கூறப்பட்டது காண்க.

3 விதிகூறுமிடத்து ஒன்றைக்கருதி ஒன்றையே விதிக்கலாமேயொழிய இரண்டுமுதலிய பலவற்றை விதித்தல் "வாக்கியபேதம்" என்னும் குற்றமாம்.

பொருணுதலிற்றாக உரையாக்கால், சூத்திர மொன்றுமாறில்லையென்க' என்று சேனாவரையர் கூறியதும் இதுபற்றியே. இதனை நச்சினார்க்கினியர் கவனிக்கவில்லைபோலும்.

ஆதலால் இச்சூத்திரத்தின் பொருள்:—மக்களைச்சுட்டும் உயர்திணையும், மக்களல்லாதவைகளைச் சுட்டும் அஃறிணையும் ஆகிய இரண்டு திணையோடும் கூடியது சொல்—என்றவாறு.

பாடபேதம். அச்சிட்ட சேனாவரையப்பிரதிகளில் 'என்மனாரென்பது இடர்ப்பட்டுழிச் சிறுபான்மை வாராது நூலுள்ளுஞ் சான்றோர் செய்யுளுள்ளும்' என்று பாடம் உள்ளது. சென்னை ஓரியண்டல் லைப்ராரிக் கையெழுத்துப்புத்தகத்தில் நூலுள்ளும் என்பதற்குப் பிரதியாக இந் நூலுள்ளும் என்று பாடம் இருக்கிறது. அதுவே மிகப்பொருந்தும்.

இளம்பூரணத்தில் 'முற்றுச்சொல் எச்சப்பெயர் என்பவாகலின், இது செய்யுளைக்கித் தொகுத்துக்கூறினான்' என்றவிடத்து 'எச்சப் பெயர்' என்பது 'எச்சப்பெயரா' என்று இருந்தால்தான் பொருள் பொருந்தும்; ஏனெனில் 'என்மனார் ஆசிரியர் என்று முடியற்பாற்று' என்பதற்கு 'முற்றுச்சொல் எச்சப்பெயரா' என்பது ஏதுவாகும். மேலும், அதனிலுள்ள 'இசைக்கும் என்பது செய்யும் என்னும் பெயரெச்சம்' என்ற வாக்கியம் பொருந்தவில்லை. சூத்திரத்துக்குப் பொருள்சொல்லுங்கால் வினைமுற்றாகவே சொன்னதாகத் தோன்றுகிறது. அன்றியும், 'இசைக்குமென்பது செய்யுமென்னுமுற்றுச் சொல்' என்று சொல்லும் சேனாவரையர் அதை மறுக்கவில்லை. ஆதலால் இஃது இளம்பூரணப்பிரதியைப் பார்த்து எழுதியவரது தவறே என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

[தொடரும்.]

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௨௪௦-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சடாயுகாண்படலம்.

இராமன் முதலிய மூவரும் சடாயுவைப் பார்த்ததைக்கூறுவது.

[பஞ்சவடியைநோக்கிச் சீதையுடன் வழிச்சென்ற இராம லக்குமணர்கள், பல காதங்கள் கடந்தபோது, சூரியன், தன்னுடைய கிரணங்கள் திரண்டு இரண்டு சிறகுகளாக, ஒரு பறவைஉருக்கொண்டு உதயகிரி உச்சியில் உற்றாற்போலப் பொன்னிறம்படைத்த கழுகாசனாகிய சடாயு ஒரு குன்றின்மேல் இருக்கக் கண்டார்கள். அவன், தனது பென்னம் பெரிய பொன்னிறமேனி மேரு நேர, தலை அந்த மலைச்சிகரம் ஒப்ப, மணிமுடி அச்சிகரத்தில் விளங்கும் சூரியன்போல வீற்றிருந்தான். அவன் கழுத்தில் அணிந்திருந்த பலநிறம்படைத்த நவமணி மாலை, நானாவித வருணங்களோடுகூடிய நவக்கிரகங்கள் விளங்கும் துருவ சக்கரம்போன்று சுடர்விட்டுத் துலங்கியது. அவன், தினமும் அசுரர்களை உடல்வேறு உயிர்வேறாகப்பிரித்து, உயிரை எமனுக்கு விருந்தாக்கி, உடலைத் தனக்கு உணவாகக்கொள்வோன். பலயுகங்கண்ட பழையோன்.

அவனை இராமலக்குமணர், ஓர் அரக்கன் உருமாறியுள்ளானென்று ஐயுற்றுக் கோபங்கொண்டு கூர்ந்துநோக்கினார்கள். அவன்,— இவர்கள் சடைமுடியும் மரவுரியும் தரித்திருத்தலை நோக்கினால், தவசியர் போல்கின்றார்; வில்லேந்தியிருத்தலை நோக்கினால் வீரர்போல்கின்றார்; தேவரோ, யாவரோ, தேர்கிலேன்; மும்மூர்த்திகளும் எனக்கு ஒளிப்பாரல்லர்; இவர்கள் அம்மூவரில் எவ்விருவருமல்லர்; மன்மதனை, அவன் ஈசன்கண்ணால் எரிந்து உரு இழக்குமுன் பார்த்திருக்கின்றேன்; அழகில் அவன் இவர்கள் காற்றாளுக்கும் ஒப்பாகான்; இவர்கள் திரிலோகங்களையுஞ் செயித்துத் தம் அடிப்படுத்து ஆளுதற்குரிய அங்கலக்கணமுடையார்; திருமகளினும் சிறந்த ஒருமங்கையுடன் வந்த

இவர்கள் எவரோ தெரியேன் ; இவர்கள் கருங்குன்றமும் செங்குன்றமும் ஒருங்குவிளங்குதல்போன்ற கம்பீரமான காட்சியுடையாராய், நிற வேற்றுமையுள்ளாரெனினும் உருஒற்றுமை உடையாராய்ச் சம்பராசுர சங்காரசமயத்தில் என்னை நண்பனாகக்கொண்ட சக்கரவர்த்தியை ஒத்திருக்கின்றார்கள் என்று கருதி, அதனால் அவர்களுக்கு அன்பினனாகி, அவர்களைநோக்கி, "நீவிர் யாவர் ?" என்றான். அவர்கள், அவனை அரக்கனென அயிர்த்தனராயினும், உண்மையன்றி ஒன்றும் உரையா உத்தமராதலால், தம்மை உள்ளபடி உணர்த்துவாராய் "நாங்கள் தசரதசக்கரவர்த்தி தநயர்" என்றார்கள். என்றவுடனே எழுந்த மகிழ்ச்சியினால், அவன் அவர்களை ஆலிங்கனம்செய்யும் ஆசை தூண்டக் குன்றினின்று தரையில் இறங்கிச் " சக்கரவர்த்தி தைரியமா யிருக்கிறானா?" என்று சேமம் வினவினான். அவர்கள் "மறந்தும் பொய்கூறாத மன்னவன், உண்மையைக்காக்க உயிரைநீத்து உம்பருலகுற்றான்" என்றார்கள். எனவே மூர்ச்சித்துவீழ்ந்தான். அவர்கள் அவனைக் கைகளால் தழுவியெடுத்துக் கண்ணீரால் கழுவக் கண்ணீர் தண்ணீர்போல மூர்ச்சை தெளிவிக்க, உறங்கினோன் விழித்தெழுந்தாற்போல உணர்வுமீண்டெழுந்து துன்பத்திலழுந்தி அகங்குழைந்தழிய அரற்றுவானாயினான்.]

357. "பரவலரும் கொடைக்கும்நின்றன் பனிக்குடைக்கும்
பொறைக்கும்நெடும் பண்பு தோற்ற
காவலரும் கற்பகமும் உடுபதியும்
கடலிடமும் களித்து வாழப்
புரவலர்தம் புரவலனே! பொய்ப்பகையே!
மெய்க்கணியே! புகழின் வாழ்வே!
இரவலரும் நல்லறமும் யானும்இனி
என்படநீத் தேகி னாயே."

இ - ள். " அரசர்க்கரசே! பொய்க்குச் சத்துருவே! மெய்க்குப் பூணே! புகழுக்கு உறைவிடமே! (தசரதா !) உன்னுடைய கொடைக்கும் குடைக்கும் பொறுமைக்கும் (முறையே தத்தம்) தன்மை தோற்றிருந்த கற்பகமும் சந்திரனும் பூமியும் (நம்மை நமது சிறந்த குணங்களினால் வென்று விளங்கிய தசரதன் இறந்தான், இனி நமக்கு நேர் இல்லையென்று கவலையற்றுக்) களிப்புற்று வாழவும் (தம் வறுமையை

ஒழிக்க உன் கொடையை நோக்கியிருந்த) யாசகரும் (உன் குடைநிழலி லே தங்கி அதர்ம வெம்மைக்குள்ளாகாது இனிது வாழ்ந்த) தருமமும் ("ஒருவர்பொறை இருவர்நட்பு" என்றவாறு உன்னுடைய பொறுமை யால் நிலைபெற்ற நண்பை உடையனாயிருந்த) நானும் எக்கதி அடைய எங்களைத் துறந்துவிட்டு இறந்துவிட்டாய்!"

பரவுதல் - புகழ்தல். பாவல் அரும் கொடை - புகழ்தற்கரிய (சிறந்த) ஈகை (க்குணம்). பனி - குளிர்ச்சி. பொறை - பொறுமை. நெடுமை மிகுதிகுறித்தது. பண்பு - குணம். தோற்ற - தோல்வி யடைந்த: இழந்த என்றும் பொருள்கொள்ளலாம். கரம் - ஒளி. அலரும் - மலரும். காவலருங்கற்பகம் - கா அலரும் கற்பகம் - ஒளியை உடைய பூத்திருக்கின்ற கற்பக தரு. காவல் அரும் கற்பகம் எனப் பிரித்து ஒளித்தல் இல்லாத கற்பக விருக்ஷம் என முந்திய உரைகாரர் பொருள்செய்திருக்கிறார்கள். அவர்கள் உரைகளை ஆதாரமாகக்கொண்டு போலும், தமிழ்ச்சொல்லகாதியில், "காவல் - மறைத்தல் (உ-ம்) 'கா வலருங் கற்பகமும்' (இராமா. சடாயுகாண். உக)" என்று பதிப்பிக்கப் பட்டிருக்கிறது. இர, சுர, பர, புர என்றற் றொடக்கத்து வினைப் பகுதிகள் இரத்தல், சுரத்தல், பரத்தல், புரத்தலென வருதல்போலக் கர என்ற பகுதி கரத்தலென வருதலன்றிக் காவல் என வரக் கண்ட தில்லை. பரவு இரவு என்ற வினைப்பகுதிகளி லிருந்து பரவல் இரவல் என்ற தொழிற்பெயர்கள் வரும். கரவு என ஒரு வினைப்பகுதி யில்லா மையால், காவல் என்ற தொழிற்பெயரும் இல்லை யென்க. கரவு - ஒளித் தல். கரவு அல் அரும் கற்பகமெனப் பிரித்து ஒளித்தலுக்கு மாறான (ஒளியாது கொடுக்கும்) அரிய (இயற்கையுடைய) கற்பக தருவெனப் பொருள்கொள்ளலாம். அல் - அல்லாத. அல்லாத - மாறான (தமிழ்ச் சொல்லகாதி). உடு - நட்சத்திரம். பதி - நாயகன். உடுபதி - நட்சத் திரங்களுக்கு நாயகனான சந்திரன். கடல் இடம் - கடல்சூழ்ந்த இட மாகிய பூமி. வாழ்வு - உறையுள் - வாழும் இடம் ("வாழி மலைபவெற் பார் வாழ்வு" சிங்கைவெண்பா.) இரவலர் - யாசகர். என்படஎத் தன்மை உற; எவ்வளவு பெரியதோர் துன்பம் அடைய என்ற பொருள் படநின்றது. அத்துன்பம் இவ்வளவினதெனப் பாவிக்கற்பாலதே யன்றிச் சொல்லற்பாலதன்றென்பது குறிப்பு. சொல்லற்கரியதைக்

குறிக்க, இத்தொடரை வேறிடத்தும் பிரயோகிப்பர். மாயமான் பின் போன இராமன் இறந்தானே என்று ஏக்கமுற்றிருந்த சீதையின் துயர்கூர்ந்த முக அழகை நோக்கி இராவணன் "உளைவுறு துயர்முகத் தொளியி தாமெனில்—முளைஎயி றிலங்கிடும் முறுவல் என்படும்!". (சடாயு உயிர்நீத்தபடலம்-கூ௨) எனக் கூறியதில் 'என்படும்' என்பது, எத்தன்மை உற்றிருக்கும், எவ்வளவு இனிய ஒளியும் அழகும் உடையதாயிருக்கும் எனப் பொருள் படவருதல் காண்க. நீத்து -விட்டு. ஏகினாய், மங்கலவழக்காய், இறந்தாய் என்னும்பொருட்டாய் நின்றது. இது போல அடுத்த பாட்டில் கடந்தனை யென்பதும் தைலம் ஆட்டு படலம் கூ௪-ம் பாட்டில் போனான் என்பதும் வருதல் காண்க. ஏ இரக்கம்.

கைம்மாறுகருதாது கொடுத்தலால் தசரதனது கொடைக்குக் கற்பகமும், வட்டமும் வெண்மையும் குளிர்ச்சியும் உடைமையால் அவன் குடைக்கு முழுமதியும், *அகழ்வாரை வீழாமல் தாங்கும் நிலம்போல இகழ்வாரைப் பொறுத்தலால் அவன் பொறுமைக்குப் பூமியும் உவமை. கற்பகம் கிட்டுதற்கரியது, கேட்டால் கேட்டதைமட்டும் கொடுப்பது; தசரதனோ, அடைதற் கெளியனாய்க் கேளாமலே குறிப்பறிந்து விரும்பியதை விரும்பிய அளவினும் மிகுதியாகக் கொடுப்பவன். ஆதலால் அவன் கொடைக்குக் கற்பகம் தோற்றது. திங்கள், மறுவுடையது, தேய்தல் வளர்தல்செய்து நிலையற்றது, பகலிற் பொலிவில்லாதது, இராகுக் கோளாற் கோட்பாடுறுவது; தசரதன்குடையோ, மறுவற்றது, நிலை பெற்றது, நிரந்தரம் பொலிவுற்றது, எக்கோளும் அணுகாதது; ஆதலால் அவன்குடைக்குச் சந்திரன் தோற்றது. அறிவுடன் பொறுத்த தசரதன் பொறுமைக்கு வெட்டுவாரையும் துப்புதல்முதலியன செய்து அசுத்தப்படுத்துவாரையும் அறிவின்றிப் †பொறுக்கும் பூமியின் பொறுமை தோற்றது.

தசரதன் இறந்ததுகேட்டு மூர்ச்சித்த சடாயு உணர்வு மீண்டவுடனே, சக்கரவர்த்தி கொடையால் வாழ்ந்த இரவலரும் அவன் குடை நிழலில் வளர்ந்த தருமமும் அவன் பொறுமையால் நட்பு நிலைத்து வளரப்பெற்ற தானும் அவன் இறந்துவிட்டதனால் எய்தும் கதி எக்கதி

*அகழ்தல் - தோண்டுதல். † பொறுத்தல் - தாங்குதல்; பிழைபொறுத்தல்.

யென்று இயல்பாக ஏங்கி இரங்கல் கம்பர்கருத்தில் தோன்ற, அதனை ஈற்றடியில் அமைத்துக்கொண்டு, அதற்கு நயமான பொருத்தமுடையனவாக, ஏனைமூன்றடிகளையும் பூரித்திருக்கும் புலமைத் திறமை, புந்தி மகிழ்ந்து போற்றிப் புகழ்தற்குரியது.

இனிய கவிகளில் நயமிக்க பகுதி இறுதியடியில் அமையப் பாடுதல், சுவை யாவும் துறைபோய தொல்கவிஞர் முறை. இதனை, இந் நூலில், வேறு பல இடங்களிற்போல, இப் பாட்டிலன்றி, இதற்கடுத்த இரண்டு பாட்டுக்களிலும் காணலாம். இப் பாட்டின் இறுதியடிப்பொருளோடு பிற அடிப்பொருள்கள் இனிது பொருந்தியிருத்தல் இதன்பின் விவ கரித்து விவரிக்கப்படுவதனால் விளங்கும்.

'புரவலர்தம் புரவலனே' முதலிய சிறப்புடைய விளித்தொடர், சடாயு தசரதன்பாற் கண்ட அருமையான குணங்களுள்ளே அருமையானவைகளை ஒரு முறை பற்றி அடுக்கிக் கூறியன என்னலாம். அம் முறை வருமாறு:—

சடாயு தசரதன்பால் முதற்கண் அறிந்தது, அவன் தன்னை நண்பனாகக்கொண்டு தன் துணைவலியால் (விண்முழுதாளியாகிய இந்திரனை வென்றிருந்த) சம்பராசுரனைச் சங்கரித்தசமயத்தில் விளங்கிய வீரமாதலால், அந்த வீரம் தன் மனத்துள் முதற்கண் முனைத்தெழ, அவ்வீரத்தால் அவன் மண்ணரசர்க்கேயன்றி விண்ணரசர்க்கும் மேலான வேந்தனு னென்பது கருதிப் (1) 'புரவலர்தம் புரவலனே' என்றானென்றும், அவன், நீதிக்குப் பகையாகிய பொய்யைச் சாவினும் அதிகமாக வெறுத்து விலக்கி அந்த நீதிக்குத் துணையாகிய மெய்யை உயிரினும் மிக்கதாக விரும்பிப் போற்றியதுகருதிப் (2) 'பொய்ப்பகையே மெய்க் கணியே' என்றானென்றும், அவனோடு தான் நெருங்கிப் பழகிய நெடுங் காலம் முழுவதினும் தன்பிழைகளையெல்லாம் அவன் அன்புமீதூர்ந்து பொறுத்ததும் "இளையான் அடக்கமே அடக்கம்" ஆதல்போல ஆற்றலுடையான்பொறுமையே பொறுமையாமென்பதும் "பொறுத்தார்க்குப் பொன்றுந்துணையும் புகழ்" என்பதும் கருதிப் (3) 'புகழின்வாழ்வே' என்றானென்றும் பொருள்விரித்துரைத்தற்குப் பொருத்தமாக மேலே எடுத்துக்கொண்ட விளித்தொடர் இருக்குதல் காண்க.

அவ் விளித்தொடர் வரிசைப்படியே, தசரதன் (1) புரவலர்தம் புரவலன் ஆயினமையால் அகில உலகத்தின் அனைத்துச் செல்வத்தையும் அடைந்து, இரவலர் ஈதனை எதனை இரப்பினும் அவர்க்கு அதனை அதனை அளித்துவந்தமையையும் (2) பொய்ப் பகையாய் மெய்க்கணியாய்ப் பொல்லாரை வீழ்வித்து நல்லாரை வாழ்வித்து நல்லறத்தை நன்கு காத்தமையையும் (3) புகழ்க்கேதுவான பொறுமையால் தன் நட்பை வளர்த்தமையையும் நினைந்து அந்த (1) இரவலர்க்கும் (2) அறத்துக்கும் (3) தனக்கும் முறையே தாரகமாயிருந்த அவன் (1) கொடையும் (2) குடையும் (3) பொறுமையும் அவனோடு மறைய, அந்தக் கொடை குடை பொறுமைகளுக்கு முறையே பகையான (1) கற்பகமும் (2) சந்திரனும் (3) பூமியும் களிப்புற்று வாழவும் அவற்றுக்கு முறையே உறவான (1) இரவலரும் (2) அறமும் (3) தானும் கவலையுற்று வீழவும் அவன் இறந்தானேயென்று இரங்கிச் சடாயு புலம்பினனென்று கொண்டு மூன்றும் அடியில் உள்ள விளித்தொடர் மற்றை மூன்றடிகளோடும் முறைப்பட்ட பொருட்டொடர்புடையதாயிருத்தல் கவனிக்கத் தக்கது.

358. "அலங்காரம் எனஉலகுக் கமுதளிக்கும்
தனிக்குடையாய்! ஆழி சூழ்ந்த
நிலங்காவ லதுகிடக்க, நிலையாத
நிலைஉடையேன் நேய நெஞ்சின்
நலங்காண வகினையோ! நாயகனே!
தீவினையேன் நண்பி னின்றும்
விலங்கானேன் ஆதலினல் விலங்கினேன்,
இன்னும்உயிர்விட்டி லேனல்!"

இ-ள். "(உலக) நாயகனே! (சிங்காதனத்தில் அரசு வீற்றிருக்கும் உனது கிரீடத்துக்கு மேலே விளங்கி அந்தக் கிரீடம்போல உனக்கு இது) அழகு செய்வதென்று (இதன் தொழில் புலப்படாமல் தோற்ற மட்டும் புலப்பட்டோர்) சொல்லாநிற்க, உலகத்தோருக்கு அமுதம் (போன்ற பாதுகாவற்றொழில்செய்தலாகிய நன்மையைப்) பாலிக்கின்ற ஒற்றைக் (கொற்றக்) குடையோனே! (நீ, உலகைவிட்டேகினல்,) உலகத்தைக் காவல்செய்தல் (ஆகிய பெருங்காரியம் தடையுற்று நடைபெறு

மல்) நிற்கவும் (அதைப் பொருட்படுத்தாமல்,) உறுதிகொள்ளாத(மாறும்) நிலைமையுடையே (னுன என்) னுடைய (உன் பால் வைத்த) சினே கத்தை உடைய நெஞ்சின்மேம்பாட்டை (யான் இறந்தால் இவன் இறப் பானு? என) ச் சோதித் தறியும்பொருட்டு (நீ இவ் வுலகைவிட்டு) ஏகி னுயோ! (உன்னை இழக்கும்படி இழைத்த) தீவினையுடையேன் (வடிவத் தால்) * விலங்குத்தன்மையுடையேனுதலால், நட்புத்தன்மையினின்றும் † விலங்கினேன். (அவ்வாறு விலங்கினதனுல்) இன்னும் (—நீ யிறந் ததை யறிந்த பின்னும்) உயிர்விடாதிருக்கின்றேன்."

அலங்காரம் - அழகுசெய்வது (அலம் - அணி; காரம்-செய்தல். தமிழ்ச்சொல்லகராதி). அமுது - தேவாமிர்தம்; இனிமை; சந்திரகிரணம். சந்திரன் அமுதை (- சந்திரகிரணத்தை) உலகத்தாருக்குக் கொடுத்தல் போல, முந்தியபாட்டில் சந்திரனே டுவமிக்கப்பட்ட தசரதன்குடையும் அமுதை [-(காவல்செய்தலாகிய) இனிமையை] உலகத்தாருக்கு உதவிய தென அமுதளிக்குங் குடையென நயம்பட உரைக்கப்பட்டது. தனிக் குடை ஏகசத்திரமெனவும், தனிக்குடையாளி ஏக சத்திராதிபதி யென வும் வடமொழியில் வழங்கப்படும். தனிக்குடை உலகத்தைப் பொது நீக்கித் தனியாக ஆளுதலைக் குறித்தது. ஆழி - கடல். "சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனுல்" என்பதில் 'அவன்' போல, காவலது என்பதில் 'அது' பகுதிப்பொருள்விகுதி. நிலையாத - உறுதிகொள்ளாத- மாறுதலுடைய. நிலை - நிலைமை. தன்மை - இயல்பு. நிலை இங்கே மன நிலையைக்குறித்தது. நேயம் - அன்பு; சினேகம். நலம்—நன்மை; அழகு; மேம்பாடு. நடந்தனையோ, மங்கலவழக்காய் இறந்தாயோ எனப் பொருள் பட நின்றது. நாயகன் - அரசன்; தலைவன். நண்பு - சினேகம். விலங்கு - மிருகம், இங்கே பறவையை யுள்ளிட்டது. விலங்கினேன் - விலகினேன்-தவறினேன். இன்னும் - இன்னமும். விட்டிலேன் - விட்டே

* விலங்கு - மிருகம். (இங்கே பறவையை உள்ளிட்டது).

† விலங்குதல் - விலகுதல்,

னில்லை. கிடக்க நடந்தனையோ எனவும் தீவினையேன் நண்பினின்றும் விலங்கினேன்.; எனவும் இயைத்துப் பொருள்கொள்க.

"விதிவலியாற் சக்கரவர்த்தி இறந்ததைச் சடாயு தன் மனநிலையைப் பரிசோதிக்கும்படி இறந்ததாகக் காரணங்கற்பித்துக் கூறியதனுல், இது - ஏதுத்தற்குறிப்பேற்றவணி." "இடுகுறியால் விலங்கான யான் இப்பொழுது உன் நண்பினின்றும் விலங்கினதனுற் காரணக்குறியாலும் விலங்கானேனென்றதாம்; பிரிநிலைநவிற்சியணி" விலங்கல்லேனாயின் நீ இறந்ததைக்கேட்டவுடன் உயிர்விட்டிருப்பேனென்பது குறிப்பு.

உடலிரண்டாயினும் உயிரொன்றேயென்னும்படியுள்ள தலைபாய நண்பினர் இருவருள் ஒருவர் இறந்தால், மற்றொருவர் தொலைவில் இருப்பினும் அப்பொழுதே உயிர்நீக்குவர்: இடையாய நண்பினர் அவ்வாறிறவார்; ஆயினும், ஒருவர் இறந்ததை ஏனையவர் கண்டாலும் கேட்டாலும் உடனே இறந்திடுவார்: கடையாய நண்பினர் அவ்வாறு செய்யாதவரென்று சடாயு கருதித் தசரதன் இறந்தபோதே தான் சாகவில்லையாயினும், அவன் இறந்தது கேட்டவுடனேயாவது சாவாமல், கேட்டுச் சிறிதுபொழுது கழிந்தும், உயிரை ஒழியாதுவைத்திருக்கின்றேனேயென்று கழிவிரக்கங்கொண்டு வருந்தினனென்பது புலப்பட இன்னும் 'உயிர்விட்டிலேனுல்' என்றுனென்றூர். இச்சொற்றொடரில் 'இன்னும்' என்ற சிறுசொல்லை இவ்வளவு பெரும்பொருள் பயக்கும்வண்ணம் ஏற்ற இடம்நோக்கி அமைத்த கவித்திறம் கூர்ந்துநோக்கிக்கொண்டாடத் தக்கது.

[தொடரும்]

வை. ப. சுப்பிரமணியமுதலியார்.

உ

கடவுள் துணை.

அநபாயகுலோத்துங்கன்.

இவ்வாண்டு ஆடிமாதச் செந்தமிழ்ப்பகுதியில் அநபாயகுலோத்துங்கன் என்ற தலைப்பிட்டுச் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரித்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீநிவாஸஐயரவர்கள் எழுதியதைப் படித்தேன். அதனால் ஐயாவர்கள் திருத்தொண்டர்புராணமாம் பெரியபுராணம்பாடிய அண்ணல் உத்தமசோழப்பல்லவராயராஞ் சேக்கிழாரடிகள் சோழசனுக்கியான முதலாங்குலோத்துங்கன்காலத்தவர் என்று கொண்டார்களென்று பிண்டமாகக் கொள்ளக்கிடக்கின்றது. ஆயினும், இவ்வுரைநடை பல ஐயங்கட்கு இடந்தருவதால் இச்செந்தமிழ்வாயிலாக அவற்றை நீக்கி விரித்தெழுதுமாறு ஐயாவர்களை வேண்டுகிறேன். ஐயாவர்கட்கு அக்கல்லூரியிற் பலவகைச் சாதனங்களும் எளிதிற்கிடைக்குமாகையால் என்போன்றோர்க்கு அவை பெரும்பயனளிக்க உற்றசாதனமாகுமென்றே இவற்றை வினவ முன்வந்தேன்.

முதலாவதாக; அநபாயகுலோத்துங்கன் என்று ஒரு அரசனும் பெயர்கொண்டதாகக் காணப்படவில்லை: சரித்திர ஆராய்ச்சியாளர்களான து. அ. கோபிநாதராயரவர்கள், டாக்டர் கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் K. V. சுப்பிரமணிய ஐயரவர்கள் முதலாயினோர் அனபாயன், குலோத்துங்கன் என்றே எழுதிச்செல்கின்றனர். பெரியபுராணமுடையாரும், 'சேயவன் திருப்பேரம்பலஞ்செய்ப — தூயபொன்னணிசோழனீடூழிபார்—ஆயசீர் அநபாயனரசவை'[1] 'கொற்றவனபாயன்' 'மன்னுசீரநபாயன்வழி முதல்'[2] 'சென்னியநபாயன் குலோத்துங்கசோழன்'[3] என்று கூறிச்

---

[1] பெரியபுராணம் திருமலை—பா 12. [2] ஷை—திருவாரூர்ச்சிறப்பு 18. [3] ஷை. நண்டே—8.

செல்கின்றாரேயன்றி யாண்டும் அநபாயகுலோத்துங்கன் என்று கூற யான் கண்டேனில்லை. இதனை விளக்குவார்களென்றே எதிர்பார்த்துள்ளேன்.

இரண்டாவதாக; முதற்குலோத்துங்கன்பேரன் இரண்டாங்குலோத்துங்கனுக்குக் குமாரகுலோத்துங்கன் என்றபேர் எவ்வாறுண்டாயிற்றென்று அறிதற்கில்லை. மகாவித்வான் ரா. இராகவையங்கார்ஸ்வாமிகள் 'செந்தமிழ்' மூன்றாவது தொகுதியில், குமாரகுலோத்துங்கன் என்பான் மூன்றாங்குலோத்துங்கனென்று அங்கைக்கனியாக நிறுத்திப்போந்தார்கள். அச்சிடப்பட்டிருக்கிற குலோத்துங்கன்கோவையும் அவன் புகழைக் குறிப்பதென்பது நூலை யூன்றிநோக்குவார்க்குப் புலனாகாதிராது. அற்றாக, இரண்டாங்குலோத்துங்கனுக்கும் குமாரகுலோத்துங்கனென்றபேர் உண்டோவென்று ஐயமுண்டாகிறது.

மூன்றாவதாக; முதலாங்குலோத்துங்கன்காலத்தே யிருந்துபாடிய புலவரான ஜயங்கொண்டார் பரணியிலே இப்பெருஞ்சேதியைக் குறிக்காத தெதனைமுன்னிட்டென்று விளக்கவும்வேண்டும்.

நான்காவதாக; வீரராஜேந்திரன்காலத்திலேயே உத்தமசோழப்பல்லவராயனது மைந்தன் பெரியநாச்சியார்கோயிலில் திருவிளக்கொன்றிட்டான் (1910-ம் ஆண்டு 165 நி.) என்கின்றனர். ஆகவே இவர்கட்கு, இனியபலகூறும் அருண்மொழித்தேவராம் சேக்கிழாரடிகள், வீரராஜேந்திரன்காலத்துக்கு (கி.பி. 1055-1070) முன்னரே எந்தையிணையடிநீழலடைந்துவிட்டார்களென்ற உறுதிப்பாடுண்டென்றுகாண்கிறது. ஆகவே, முதலாங்குலோத்துங்கன்காலத்தே தொண்டர்சீர்பரவுவார் இருந்தாரென்றல் பொருந்துவதெங்ஙனம்?

ஐந்தாவதாக; 1911-ம் ஆண்டுக் கல்வெட்டறிக்கையிலே* அநபாயன், குலோத்துங்கன் திருநீற்றுச்சோழன் என்ற பேர்கள் இரு

*G. O. No. 919 of 29—7—12. para 27.

வருக்கும் பொருந்துமென்றும் இவர்துள் இன்னுரென்று நிதானித்தற் கில்லை என்றும் கூறுகின்றார்கள்? அச்சிக்கலை யறுத்துத் தமது கோட் பாடு நாட்டினார்களில்லை.

ஆறாவதாக; முதலாங் குலோத்துங்கன், சோழ அரியணையடைந்த பதினான்கு ஆண்டுகட்குப்பின்னரே திரிபுவனசக்கரவர்த்திகள் என்ற பட்டந்தரித்தான். அதன்பின்னரே சுங்கங்களைத் தவிர்த்துச் சுங்கந் தவிர்த்த சோழனானான். இவர்கள்காட்டும் கல்வெட்டுக்கள் பன்னிரண்டா மாட்டையன. இஃதன்றி இவன கோனேரின்மையானது உட்கலகங் களையடக்கி வேற்றுநாடுகளை எறிந்து நோலரைக் கடந்தபின்னன்றோ? இவ்வாறுசெய்தது முதலாங்குலோத்துங்கனது 14 ஆண்டுகட்குப் பின்னரென்பதுகொண்டு அதற்குமுன் நேர் இன்மையனுகான். வேதாரணியத்துக் கல்வெட்டொன்றில் இரண்டாங்குலோத்துங்கனைக் கோநேர்இன்மைகொண்டான் என்று கூறியிருக்கிறது. இதுபோன்ற பல கல்வெட்டுக்க ளுளவாகலின் இவற்றாற் போந்த ஐயப்பாடு நீக்கல் தகுதியாம்.

ஏழாவதாக; இவர்கள்குறித்த திருவாரூர்க்கல்வெட்டிலேயே இரண் டாங்குலோத்துங்கனுடைய ஏழாமாண்டில், திருமருகல்நாட்டிலுள்ள ஒரு ஊருக்குப் 'பழம்பெயரும் முன் னிறைகட்டினபடியுந் தவிர்த்து யாண்டு 7வது முதல் அனபாயநல்லூர்'* என்று பேரிட்டதாக வாசிக்கி றோம். இவன் தன்னை அநபாயன் என்று கூறினானென்பது மேற்கண்ட கல்வெட்டின்கீழ்க்காணும்,

ஸ்ரீகெளஷ்ய ஹவ ஈரீஸவாமயிவ திஸ்லூஷாதிதிதூஷெ
ெதஜொஹெலேஷாயி நாயவாண நூாவெொஜஸ நூஸகஃ ।
வ்யாநாரு ஹாரவாஹெலேஹாயி நாயொ
வாஷாரவிஷ்டீயோரஷு நவாய நாரா ॥

---

*செந்தமிழ் கசுஉம் தொகுதியின் சக௦-ம் பக்கம் ௩௦-ம் வரியில் அன்பிராய என்றிருப்பதை அனபாய என்று திருத்திக்கொள்க.

என்ற ஸ்லோகத்தால் தெளியப்படும். இதனை மறுக்க வேறுஆதாரங்க ளுண்டோவென்று குறித்தாரில்லை.

எட்டாவதாக; அபயன், அநபாயன், குலோத்துங்கன் என்ற பெயர்கள் இயற்பெயர்களாகாத காரணப்பெயர்களாயும், பட்டப்பெயர்க ளாயும் பலராலும் முன்னும் பின்னும் கொள்ளப்பட்டிருப்பதனுலே இராஜேந்திரசோழனுன முதற் குலோத்துங்கன் எவ்வாறு அப்பெயரை யடைந்தானென்றும் விரித்தெழுதிக் காட்டவேண்டுகிறேன்.

இலக்கணவிளக்க ஆசிரியர் பாரம்பரை

திரு—சோமசுந்தரதேசிகன்.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முத லியவைகளையும், செந்தமிழ்க்கு மாற்றுக அனுப்பும் பத்திரிகைகளையும் செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்த மாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலிவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லெக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

உ

சிவமயம்.

திருக்குற்றால ஊடற்பிரபந்தம்.

[இது, திருக்குற்றாலத்தலபுராணம் முதலிய பலநூல்களை இயற்றிய புலவர்பெருமானாகிய மேலகரம் திரிகூடராசப்பக்கவிராசமூர்த்திகளால் இயற்றப்பட்டது. இதுவரை அச்சிடப்படாதது. செந்தமிழபிமானிகள் படித் தின்புறுமாறு வெளியிடப்படுகிறது. இந்நூற் கையெழுத்துப் பிரதியுடையவர்கள் கொடுத்துதவுவார்களாயின், திருத்திப் புத்தகமாக அச்சிட்டுவெளியிடலாகும். மே. சோ. சுப்பிரமணியக்கவிராயர், தமிழ்ப் பண்டிதர், இந்து கலாசாலை, திருநெல்வேலி.]

காப்பு.

பொருப்பிறை திருக்குற் றாலப் புனிதனும் புவன மீன்ற
வொருத்தியும் புலவி தீர்ந்த வோலக்க மினிது பாடத்
திருக்கைவேற் கதிரென் றோங்குஞ் சேவகன் முன்னே தோன்றி
மருப்பெனப் பிறையொன் றேந்தும் வழுவையான் வழுவை யானே.

நூல்.

தேரேறுஞ் சூரியர்கள் வலம்புரியும் வலம்புரியின் செம்பொற் கோயிற்
றாரேறு மலர்தூவித் தாலத்தார் பரவியகுற் றாலத் தாரே
யேரேறு கடற்பிறந்த கருணைநகை முத்துவெளுத் திருப்ப தல்லால்
ஆரேறு மழுப்படையீர் பவளம்வெளுத் திருப்பதழ காகுந் தானே. (1)

காகமணு காததிரி கூடமலை யணங்கேயுன் கற்பின் சீர்த்தி
யோகமுறை பணிந்தேத்தி யுயர்மறையெ லாம்வெளுப்பா யுனக்கு மூத்த
மேகவண்ணன் கடல்வெளுப்பா யாமிருக்கு மலைமுழுதும் வெளுப்பா யென்ற
னாகமெலாம் வெளுப்பான லதரம்வெளுப் பேறுதென் றூர்சொல் வாரே. (2)

ஆரிருந்துந் தனித்திருந்தும் பிறைமவுலித் திரிகூடத் தண்ண லாரே
சீரியபொன் முலைக்குறியும் வளைக்குறியும் பெற்றிருந்த தேவ ரீர்தா
மார்பிலொரு மைக்குறியும் வாடைமஞ்சட் குறியுமின்று வரப்பெற் றீரே
நேரிழைதன் பேருரையீர் வஞ்சந்தா னேவுமது நெஞ்சந் தானே. (3)

நெஞ்சகத்தி.னீயிருக்க நின்னையல்லா லொருவரையு நினைய லாமோ
வஞ்சலிட்ட குழைதடவுங் கயல்விழிப்பெண் குழன்மொழியே யொன்று கேளா
யஞ்சனத்தின் வண்ணமல்ல திருச்சாந்து வழிந்தநிற மதுவே யன்றி
மஞ்சளைப்போ லிருந்தநிறம் பொன்னிதழித் தாதவிழ்ந்த மாற்றந் தானே. (4)

மாற்றுவெள்ளி மலையிலொரு பவளமலை கொலுவிருக்கு மகிமை போல
வேற்றுவெள்ளை விடைமீதிற் காட்சிதருங் குற்றாலத் தெந்தை யாரே
யாற்றுவெள்ளை சடையிருக்கக் கீற்றுவெள்ளை மதியிருக்க வதிக மாநீர்
நேற்றுவெள்ளை சாத்தினதை யின்றுசிவப் பானகண்ணு னிறுத்தி னீரே. (5)

நிறுத்திநாம் பிரிந்ததில்லை நீபிரிந்து பனிவரைக்கே நிற்கு நாளிற்
பொறுத்துநாம் வடவாலின் கீழிருந்தோ மதுதனக்குப் பொறுப்பில் லாமற்
சிறுத்துநாண் மலர்தூவிக் கறுத்துவந்த சேவகனைச் சிவந்த போது
குறித்துநாம் பார்த்தவிழி சிவப்பன்றோ குழன்மொழிப்பூங் கொடியன் னாளே. ()

அன்னாளிற் கோவணமும் புலித்தோலும் வேடமுமா யாலின் கீழே
பன்னாளுந் தூங்கினீ ரென்னாலே மணக்கோலப் பதம்பெற் றீரே
யின்னாளிற் சலவைகட்டிப் பூமுடித்துத் தினஞ்சுகித்தா லிதுவோ செய்வீர்
மின்னாரு மினிச்சிலபேர் வேண்டாவோ நீண்டசங்க வீதி யாரே. (7)

வீதியாய் மரவுரிகட் டிஞ்சனம்பூண் டரியதவ வேடந் தாங்கி
ஆதிநாட் கான்றேறு மலைந்துதிரிந் தானதுபோ லயோத்தி மேவி
மாதுசீ தையைப்புணர்ந்து பாராண்ட வுங்களண்ணன் மார்க்க மெல்லாங்
காதுகேட் டிருந்துமிது சொன்னதென்ன குழல்மொழிப்பூங் கயற்கண் மாதே.()

மாதர்பாற் பலியிரந்தீர் பலியிடப்பைந் தார்துகிலும் வளையுங் கொண்டீர்
சாதுவாய்த் தோலுடுப்பீ ரரையிலுள்ள சோமனையுந் தலைமேற் கொள்வீர்
காதிலே பாம்பையிட்டீர் கழுத்திலே நஞ்சையிட்டீர் கனபேய் கொண்டீர்
ஆதலா லுமைப்போலும் பித்தருண்டோ குற்றாலத் தண்ண லாரே. (9)

அண்ணல்வரைத் திரிகூடப் பெண்ணமுதே கேட்டியுங்க ளண்ண னான
கண்ணன்முதல் வாகுதின்று வாயாலு மெடுத்தபண்டைக் கதைகே ளாயோ
மண்ணிலொரு காற்சிலம்பைக் கையிலிட்டான் கைவளையை வாய்மே விட்டான்
பெண்ணொருத்திக் காயொருத்தி புடவைகிழித் தானவனே பித்த னாமே. (10)

பித்தனென்றும் பாராமற் பெண்கொடுத்தா னவனோடு பிறந்த வாசிக்
கித்தனைபெண் சீருமிட்டான் கையம்பா வுமக்கிருந்தா னெந்த நாளும்
மைத்துனனைப் பாராட்டி யெங்களண்ணன் செய்தநன்றி மறந்த தாலே
சத்திபீ டத்துறைவீர் செய்தநன்றி நீர்மறந்த சங்கை தானே. (11)

சங்கமெடுத் தேதிரிந்தான் சக்கரா
யுதங்கொடுத்தோந் தலைநாட் கொண்ட
சிங்கவெறி தீர்த்தருளிச் செய்யாளை
முகம்பார்க்கச் செய்தோங் கண்டாய்
மங்கைகுழல் வாய்மொழியே யுங்களண்ணன்
செய்தநன்றி மறந்த தாலே
யெங்கெல்லாம் பால்திருடி யெங்கெல்லா
மடிபடவு மேது வாச்சே. (12)

வாய்ச்சதிரி கூடமலைக் கிறையவரே
சொன்னமொழி மறக்க வேண்டா
மேச்சுவந்து சுமந்ததெங்க ளண்ணற்கோ
வுமக்கோவென் றெண்ணிப் பாரீர்
காய்ச்சியபால் கண்ணனுண்டான் வேடனெச்சி
னீர்கலந்தீர் கருணை யாமா
லாய்ச்சிகையா லடிபட்டா னையரேநீர்
பேடிகையா லடிபட் டீரே. (13)

அடிப்பதுவு மாய்ச்சியர்பால் குடிப்பதுவு
மிசைந்தானு மரச னாக
முடித்தலையில் முடியுமின்றிப் படிபுரந்தா
னும்முனது முன்வந் தானும்
படிக்கலமும் பசுநிறையும் பயின்றானுங்
குழல்மொழிப்பூம் பாவை கேளா
யிடைக்குலத்திற் பிறந்தானே வெதுகுலத்திற்
பிறந்தானே யிவன்கண் டாயே. (14)

கண்டிருந்துங் கன்னியர்க்கா வெனைப்பிரிந்த
மதந்தானே கலவித் தேற
லுண்டிருந்த மதந்தானே யெங்களண்ணன்
குலத்தில்மறு வுரைத்தி ரையா
பண்டிருந்த வுமதுகுல நான்சொன்னாற்
பழுதாயோ பரம ரேநீர்
கொண்டிருந்துங் குலம்பேசன் ஞாயமோ
குற்றாலக் கூத்த னாரே. (15)

கூத்திருந்த பதம்பெறவே கொதித்திருந்த
முனிவர்களுங் கொலுச்சே விக்கக்
காத்திருந்த தேவர்களுங் காட்சிபெற
வேண்டியுனைக் காந்து போனோம்
பூத்திருந்த திரிகூடப் பொருப்பிருந்த
பசுங்கிளியே புலவிக் காக
வேத்திருந்த வார்த்தையெல்லா மெதிர்த்திருந்து
நீயுரைத்தா லென்செய் வோமே. (16)

என்மேலும் பத்தியில்லாத் தேவருண்டோ
 வெனைப்பிரிந்து வீதி போகத்
தென்மேவு திரிகூடச் செல்வரே
 நீதியுண்டோ தேவ ரீர்மேல்
முன்மேவுங் குற்றமுண்டு திருவாக்குக்
 கெதிர்வாக்கு மொழிந்த தாலே
தன்மேலுங் குற்றமுண்டு தமையனார்
 மேலுமுண்டோ தாழ்ச்சி தானே. (17)

தமையனென்றுந் தங்கையென்றும் பேதகமோ
 குழன்மொழிப்பூஞ் சகத்தை யீன்ற
வுமையவளே தமையனுனக் கருமையென்று
 னமக்குமவ னருமை யாமே
நமையுமோர் குறையுரைத்தாய் நாமவனைச்
 சரசமா நவின்றோங் கண்டா
யிமையவர்கள் வேண்டுதற்கா யித்தனையும்
 பொறுத்தருள்வா யிமய மாதே. (18)

மாதேவர் நீரொருவ ராடினது
 கூத்தாச்சு வலியோர் செய்தால்
தீதேதுஞ் செமியாதீர் குற்றால
 நஞ்சையுண்டு செமிப்பீ ரையா
போதாது நீரளக்கு மிருநாழிப்
 படியெனக்குப் பொன்னும் பூணுஞ்
சூதான வகைமுழுதுஞ் சொன்னாலென்
 னுற்பெருமை சொல்ல லாமோ. (19)

சொன்னமலை தனதாச்சுப் பொன்னுலகு
 வெள்ளிமலை சொந்த மாயிற்
றின்னமொரு பொருளுமுண்டோ பெண்கள்பே
 தமைக்குணந்தா னிதுபோ லுண்டோ
வுன்னரிய விளைநிலமு நன்னகா
 நவநிதியு முனக்கே யென்று
பன்னிகுழல் வாய்மொழியே பாலித்தோம்
 பட்டயமும் பாலித் தோமே. (20)

வாழ்த்து.

வார்வாழுர் தனத்திகுழல் வாய்மொழியம் பிகைவாழி வதுவை சூட்டுந்
தார்வாழி திரிகூடத் தார்வாழி குறுமுனிவன் றலைநாட் சொன்ன
பேர்வாழி யரசர்கள்செங் கோல்வாழி நன்னகரப் போரா லோங்கு
மூர்வாழி குற்றாலச் சிவனடியார் வாழிநீ ரேழி வாழி.